# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 53 ○ 26.11.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ✉ ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்



## அன்பிற்கு அகவை 65

உலகத்தமிழினம் கொண்டாட்டம்



2 ஆம் ஆண்டில்

## இலக்கு மின்னிதழ்

உலகத்தமிழர்கள் வாழ்த்து



# அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தாயகத்தில் நாளை மாவீரர் தின நினைவேந்தல்

## தமிழகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் முன்னெடுப்புகள் தீவிரம்

தமிழீழ விடுதைலைக்காக, தம் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர் செல்வங் களுக்கு நாளை கார்த்திகை 27 இல் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும் பணியில் உலகத் தமிழினம் ஒன்றுபட்டு உணர்வெழுச்சியுடன் முன்னெடுத்து வருகிறது.

தாயகம், புலம்பெயர்தேசம், தமிழகம் எங்கும் இப்பணிகளுக்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்றாலும்; தாயகத்திலே நினைவேந்தல் நிகழ்வினை முற்றாக தடுக்கும் செயற்பாடுகளில் சிறிலங்கா அரச படைகள் நேரடியாக களத்தில் இறங்கியுள்ளன. நினைவேந்தலுக்கான பூர்வாங்க பணிகளில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள், யுவதிகள், சமுக ஆர்வலர்கள், தமிழ்த் தேசிய பற்றாளர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளில் சிறிலங்கா புலனாய்வு படையினர் தீவிரம் காட்டி பாரிய கெடுபிடிகளை செய்து வருகின்றனர்.

மாவீரர் தின நினைவேந்தலைச் செய்வதற்காக தமிழர் தாயகத்தில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களை துப்பரவு செய்யும் பணிகளில் அந்தந்த பிரதேசத்தில் உள்ள தமிழ்த் தேசிய பற்றாளர்கள் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய், உடுதுறை உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இதேவேளை கிளிநொச்சியில் கனகபுரம், முழங்காவில், தேராவில்



முல்லைத்தீவில் அளம்பில், முள்ளியவளை, வன்னிவிழாங்குளம் மன்னாரில் பெரியபண்டி விரிச்சான், ஆட்காட்டி வெளி, வவுனியாவில் ஈச்சங்குளம், மட்டக்களப்பில் தரவை, மாவடி முன்மாரி, அம்பாறையில் கஞ்சிகுடிச்சாறு மற்றும் திருகோணமலையில் ஆலங்குளம் ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களை துப்பரவு செய்யும் பூர்வாங்கச் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளது.

நினைவேந்தலுக்கான ஒழுங்கமைப்புக்கான பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் பெயர் விபரங்கள், அங்கு வந்த புலனாய்வு பிரிவினரால் திரட்டப்பட்டுள்ளதோடு அதற்கான நிதி எங்கிருந்து வந்தது உட்பட சிலரின் புகைப்படங்களும் கையடக்கத் தொலைபேசி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.ஆட்சிமாற்றத்தின் பின்னர் புலனாய்வாளர்களின் செயற்பாடுகளும், ரோந்து நடவடிக்கைகளும் தாயகத்தில் அதிகரித்துள்ளதாகவும் தகவல் திரட்டுக்களில் பகிரங்கமாகவே அவர்கள் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இம்முறை மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வினை எவ்வாறாவது தடுத்துவிட வேண்டும் என்ற முனைப்பில் படையினர் செயற்பாடுகளை ஆரம்பித்து ள்ளதோடு தாயகத்தில் அதுபற்றி முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக தேசிய புலனாய்வு

தொடர்ச்சி 6 பக்கம்

# இலக்கு நோக்கிய இலக்கின் பயணத்தில் ஆண்டு ஒன்று

சென்ற ஆண்டு எமது தேசியத் தலைவரின் பிறந்த நாளன்று அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையத்தின் ஊடகப் பிரிவான, அனைத்துலக தமிழூடக மையத்தின் சார்பில் இலக்கு மின்னிதழ் பிறப்பெடுத்திருந்தது. தமிழீழ விடுதலை போராட்டத்தின் ஆயுத மௌனிப்பு அறிவிப்பின் பின்னரான கடந்த 10 ஆண்டுகளில் எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும் இலக்கு நோக்கிய பயணம் தமிழ் தேசிய விடுதலை நோக்கிய பாய்ச்சலில் தேங்கிக் கிடக்கிறது. எமது தேசிய விடுதலை இயக்கத்தால் முன்னிறுத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த மக்களின் ஆதரவோடு பாராளுமன்றத்துக்கு தெரிவானார்களோ அந்த மக்களுக்கு துரோகமிழைத்து தமக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மறந்து தமது உண்மை முகத்தைக் காட்டிக் கொண்டிருக் கிறார்கள்.

தாயகத்திலும், தமிழகத்திலும், புலம் பெயர் தேசங்களிலுமுள்ள தமிழ் தேசிய விடுதலைக்காக கட்டியெழுப்பப்பட்ட அமைப்புக்கள் தமிழ் இனவிடுதலைக்கான ஒற்றைப் புள்ளியில் ஒன்று சேராமல் பலவித கற்பிதங்களோடு பிளவுண்டு கிடக்கின்றார்கள். இனவிடுதலைக்காக களமாடி உயிர்த்தியாகம் புரிந்த மாவீரர் குடும்பங்களும், விழுப்புண் எய்திய போராளிகளும் தாங்கொணாத் துயரங்களைச் சுமந்த எங்களது மக்களும் உரிய வாழ்வாதாரங்களின்றி வாடிக் கிடக்கின்றார்கள். இறுதி யுத்தத்தில் தமது உறவுகளை ஒப்படைத்து பத்தாண்டுகளாக அவர்களைத் தேடியலையும் எமது உறவுகளின் போராட்டங்களும் கேட் பாரற்றுக் கிடக்கிறது.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறீலங்கா சிறைகளில் வாடுகிறார்கள், திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு தொடர்கிறது. உலகப் பரப்பெங்கும் தமிழ்த் தேசிய சிந்தனைகளை விதைத்து வந்த தமிழ்த் தேசிய ஊடகங்கள் முள்ளிவாய்க்காலின் பின்னர் வியாபாரிகளின் கைகளுக்கு மாறி அவை தமிழ்த் தேசிய முகமூடியோடு வியாபாரம் செய்து வருகின்றன. கூட்டுச் சிந்தனைகளும், சமூகச் சிந்தனைகளும், தேசியச் சிந்தனைகளும் மருகி தனி மனித சிந்தனைகளும் தனி மனித ஏற்றங்களும், தனி மனித துதிபாடல்களுமே மேலோங்கி வருகிறது. தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவுக்கும், இருப்புக்கும், வளர்ச்சிக்கும் தடைகளை ஏற்படுத்தும் அல்லது துரோகமிழைக்கும் செயற்பாடுகள் தொடர் கதையாக தொடர்கின்றன. இந்த ஒரு சூழமைவில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமது விடுதலைக் கனவிலிருந்து விலகாமல் இருக்கிறார்கள் என்பதை தொடர்ந்து இடம்பெறும் தன்னெழுச்சி போராட்டங் களாலும், தேர்தல் முடிவுகளாலும் தெரிவித்து நிற்கின்றனர்.

இந்நிலையில் மாவீரர்களாலும், எங்களது மக்களாலும் செந்நீரும், கண்ணீரும் விட்டு வளர்க்கப்பட்ட எங்களது விடுதலைப் பயிரை கருக விடாது பாதுகாக்கவும், வளர்த்தெடுக்கவும் தமிழ் தேசிய விடுதலை இலக்கு நோக்கிய முன்னுரிமையோடு பயணிக்க வேண்டிய தேவையையும் உணர்ந்ததன் வெளிப்பாடே இலக்கு மின்னிதழ், இலக்கு இணையத் தோற்றங்கள்.

தமிழ்த்தேசிய விடுதலைப்பயணத்தில் எம் இலக்கை நோக்கி எமது உரிமைகளை நிலைநாட்ட நாம் பயணிக்க வேண்டிய வழிகளை இனங்காணும், இனங்காட்டும் பணியில் இன்று இலக்கு மின்னிதழ் ஓராண்டை கடக்கிறது. இன விடுதலைப் போராட்ட வரலாறுகளில் வீழ்ச்சி, பின்னடைவு, தற்காலிக தோல்வி ஒன்றும் புதிய விடயங்களல்ல. வீழ்ந்தே கிடப்பது தான் ஏமாற்றம் தருவதாகும். தோற்றுப்போன மனப்பான்மையோடும், கிடைப்பதைப் பெற்றுக் கொள்வோம் என்ற மனப்பாங்கோடும் ஒட்டுமொத்தமான தமிழ்த் தேசிய இனமாகச் சிந்திக்காமல் எங்கள் தேவைகளைப் பார்த்து விட்டுப் போவோமென்ற சுயநல மனப்பாங்குமே இன்றைய நிலைக்குப் பிரதான காரணங்களாக இருக்கின்றன.

பரஸ்பர புரிந்துணர்வுகளின்றி, கலந்து பேசும் தன்மைகளின்றி, தம் நிலைப் பாடுகளிலேயே மற்றவர்களும் இருக்க வேண்டுமென்ற குறுகிய பார்வைகளோடு, சேர்ந்து பணி செய்யும் உயர்ந்த பண்பை மறந்து, கண்ணியமான தலைமைத்துவமும், வழிகாட்டலுமின்றி இன்னமும் தன்னை மீளக் கட்டமைக்காத இனமாக எமது இனம் நலிந்து கிடக்கின்றது. இந்த உலகுக்கு தொன்மையான மொழியையும், கலை பண்பாட்டையும், நாகரீகத்தையும் இன்னும் பலவற்றையும் கொடுத்த ஒரு பேரினம் தன் கையிலும், மடியிலும், தோளிலும் உள்ள பலங்களை அறியாது தன்னிடமுள்ள பலத்தை கிடைக்க முடியாத இன்னுமொரு இடத்தில் தேடிக் கொண்டிருப்பது விசனத்துக்குரியது. நாம் சிறுபான்மையினர் அல்லர். சிறுபான்மை ஆக்கப்பட்டவர்கள். தொன்றுதொட்டு இலங்கை முழுவதும் வாழ்ந்த, ஆண்ட பூர்வீக உரித்துடைய இனமாக தமிழினம் விளங்கியது என்பதே வரலாற்று பதிவாக உள்ளது. பிரித்தானியர் இலங்கை முழுவதையும் ஆட்சிக்குட்படுத்தும் வரை வடக்கும், கிழக்கும், மத்தியும் (கண்டி) கூட தமிழ் இராச்சியங்களாகவே இருந்தன என்பதும் நாமறிந்ததே. இந்த மண் எங்களின் சொந்த மண்.

எங்கள் பலங்களை நாம் ஒன்று சேர்க்கவும் தாயகம், தமிழகம், புலம் பெயர் நிலங்கள் என எங்கும் இனவிடுதலை என்ற ஒற்றைப் புள்ளியில் சுயநலன்களை கடந்து நாம் கைகோர்க்கவும், இலக்கை நோக்கி நாம் மீண்டும் முனைப்போடு பயணிக்கவும் இலக்கு உங்களோடு கைகோர்த்துப் பயணிக்கும்.

எமது இலக்கு நோக்கிய பயணத்தை துரிதப்படுத்தவும், ஆளுமைப்படுத்தவும் செப்பனிடவும் முனைகின்ற எம் ஊடகங்களை ஆற்றல்படுத்தவும், ஆளுமைப்படுத்தி செப்பனிடவும் இது ஒரு கூட்டுப் பணி என்பதை உணர்ந்து எம்மோடு கைகோர்க்க முன் வாருங்கள் என இன்றைய நாளில் அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையமும், இலக்கின் பங்காளர்களும் உங்களை உரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

இதுவரை காலமும் இலக்கு மின்னிதழ், ஆக்கங்களை கட்டுரைகளை, செவ்விகளை, மொழி பெயர்ப்புக்களை, ஆலோசனைகளை வழங்கியோர், செய்தியாளர்கள், வடிவமைப்பாளர்கள், ஒப்புநோக்கியோர் இந்த ஊடகங்களை உலகப் பரப்பெங்கும் கொண்டு சென்றோர், வாசகர்கள், சிறப்பிதழுக்கான வாழ்த்துரைகளை வழங்கியோர் மற்றும் நிதிரீதியான பங்களிப்பை வழங்கி எம் ஊடகங்களை தாங்கி நின்றோர் அனைவரையும் நன்றியோடு நினைந்து கொள்கின்றோம்.

காலம் கட்டளைகளுக்காய் காத்திருந்த படியே நகர்கிறது. காலம் தந்து செல்கின்ற செய்திகளையும், வாய்ப்புக்களையும் உள்வாங்கியவர்களாக இலக்கு நோக்கி அறிவு பூர்வமாக பயணிப்போம். தமிழீழ தேசியத் தலைவர் காட்டிய பாதையும், மாவீரர்கள் வழி நடந்த தடங்களும் எங்களை இலக்கை நோக்கி என்றும் வழி நடத்தட்டும்.

[redacted]


அன்பிற்கு
அகவை 65
இலட்சியத்தால் ஒன்றுபட்டு
எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு
சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது!
அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையம்

# இலக்கு மின்னிதழுக்கு தாயகத்தின் சிவில் சமூகத்தினர் வாழ்த்து

## விடுதலைக்கான பயணத்தில் விடைபெறக்கூடாது

### தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் ரி.வசந்தராசா



தமிழினத்தின் விடுதலைக்கான பயணத்தில் ஊடகங்களின் பங்கு மிகப் பெருமளவில் இருந்திருக்கின்றது. தற்போதும் ஊடகங்களின் வகிபாகம் மிக முக்கியமானதாக இருந்து கொண்டிமிருக்கின்றது. அவ்வாறான நிலையில் இலக்கு மின்னிதழும் தனது தார்மீகப் பொறுப்பிலிருந்து விலகாது தமிழினத்தின் விடுதலைக்கான பயணத்தில் விடைபெறாது தனது வகிபாகத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.


முதலாவது ஆண்டை வெற்றிகரமாக இலக்கு மின்னிதமிழ் நிறைவு செய்கின்றமை பெருமைப்பட வேண்டியதும், வாழ்த்துவதற்குரியதுமான சந்தர்ப்பமாகும். இவ்வாறான நிலையில் இலக்கு மின்னதழுக்கு எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் புலம்பெயர் தேசத்திலிருந்து எமது மக்களின் அரசியல், சமூகப் பிரச்சினைகளைப் புடம் போட்டுக் காட்டும் அரும்பணியை இலக்கு முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

தாயகத்தில் நடைபெறுகின்ற இனம்சார்ந்த விடயங்கள், இனவிடுதலை சார்ந்த செயற்பாடுகள் அனைத்தையும் வெளிக்கொண்டு வருவதோடு தமிழினத்தின் அண்மைகால நிலைமைகள் தொடர்பாக துல்லியமாக விடயங்களை வெளிப்படுத்தும் ஓர் ஆவணமாகவும், குரலற்றவர்களுக்கான குரலாக ஓங்கி ஒலித்தும் இலக்கு இருந்து வருகின்றது.

தாயகவாழ் தமிழர்களுக்காக புலம்பெயர் தேசத்திலிருந்து அரும்பணியாற்றும் இலக்கு எவ்விதமான தடைகளுக்குமின்றி தனது இனவிடுதலைக்கான குரலை தொடர்ந்தும் எழுப்பி வரவேண்டும் என்றும், அதன் காத்திரமான பங்களிப்பு தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்றும் பிராத்தனை செய்கின்றேன்.

## இலக்கின் தூய்மையான பணி தொடரவேண்டும்

### தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார்



தமிழ் மக்களின் வாழ்வியல் விடியலை ஏற்படுத்துவதற்கான பயணத்தில் துணையாக இருப்பதை இலக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இலக்கு மின்னிதழ் ஆண்டொன்றை நிறைவு செய்துள்ளது.

தமிழ் மக்களின் துயரங்கள், நீதிக்கான கோரிக்கைகள், அரசியல் நகர்வுகள், சிவில் அமைப்புக்களின் கருத்துக்களென வாராவாரம் தாங்கிவந்து தமிழ்த் தேசியத்திலும், தமிழர் தேசத்திலும் தாக்கத்தினைச் செலுத்தி வருகின்றது.

இலக்கு மின்னிதழ் மக்களோடு மக்களாக நின்று மக்களின் குரலாக ஓங்கி ஒலித்து வருகின்றது. அந்த இதழ் எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோடு அந்த நோக்கத்தின் இலக்கை அடையும் வரையில் நடுநிலையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் தொடர்ந்தும் இயங்க வேண்டும். அதற்குரிய ஆத்மாத்த சக்தியையும், பற்றுறுதியையும் இறைவன் வழங்கவேண்டும் என்று ஆசீர்வதிப்பதுடன் இலக்கு தடையின்றி நீதிக்காக ஏங்கும் மக்களின் குரலாக நீண்ட பயணத்தைத் தொடர்வதற்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## எமது கண்ணீரை உலகமெங்கும் இலக்கு மின்னிதழ் கொண்டு செல்கிறது!

### கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கத்தின் இணைப்பாளர் கலாரஞ்சனி உருக்கம்



எமது உறவுகளைத் தொலைத்துவிட்டு நாம் அவர்களை தற்போது வரையில் தேடியலைந்து கொண்டிருக்கின்றோம். பல்வேறு போராட்டங்கள், பல்வேறு கோசங்கள் என அனைத்தையும் நாமே மேற் கொண்டிருக்கின்ற போதும் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை தற்போது வரையில் அறியமுடியாத அவலத்திலேயே இருக்கின்றோம்.

உள்நாட்டில் எமது கோரிக்கைகளை கருத்திலெடுக்கப்படாத நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அரங்கிலும், சர்வதேசத்திடமும் எமக்கான நீதிக்கோரிக்கையினை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றோம். ஆனால் தற்போது வரையில் எமது கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட்டதாக இல்லை. இதனையிட்டு ஆழ்ந்த கவலை கொண்டவர்களாக இருக்கின்றோம்.

தமது பிள்ளைகளை தொலைத்த அம்மாக்களும், கணவரை தொலைத்த மனைவியரும், சகோதரங்களை இழந்த பெண்களும் கண்ணீருடன் போராடி வருகின்றோம். தமது உறவுகளுக்காக பெண்கள் போராடுகின்றார்கள் என்ற இரக்கமின்றி எமது போராட்டங்களை மலினப்படுத்தும் வகையிலும், சிதைக்கும் வகையிலும் எம்மீது சேறுபூசும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நிலைமைகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்ற நிலையில் இலக்கு மின்னிதழ் எமது போராட்டங்களையும், எமது கோரிக்கைகளையும், நீதிக்கான எமது குரல்களையும் தொடர்ச்சியாக பதிவு செய்து வருகின்றது.

எமது நீதிக்கான போராட்டத்தினையும் கண்ணீரையும் இலக்கு மின்னிதழ் உயிர்ப்புடன் காவிச் செல்கிறது. இத்தகைய நேர்மையாக பணியாற்றும் ஊடகமான இலக்கு மின்னிதழின் பணிகள் தொடரவேண்டும். எமது அவலங்களின் குரலாக இலக்கு தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

## இலக்கின் ஊடகப்பணி இன்றியமையாதது

### யாழ்.பல்கலை மாணவர் ஒன்றிய செயற்பாட்டாளர் பபிலராஜ்



தூர நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட வார வெளியீடான இலக்கு மின்னிதழ் வெற்றிகரமாக ஓராண்டினை நிறைவு செய்யும் வேளையில் இலக்கின் பயணம் தொடர்ந்தும் வெற்றிகரமானதாக அமைய வேண்டும் என்று யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் சார்பிலும், தமிழ்மக்களின் சார்பிலும், இலக்கு மின்னிதழுக்கும், அதன் ஆளணி கட்டமைப்பினருக்கும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். வாரத்தின் முக்கியமான அரசியல் நிலவரங்கள், அரசியல் கட்டுரைகள், அவதானிப்பு மைய அறிக்கை. அறிவாயுதப் பக்கத்தில் வெளியாகும் பல்வேறு அறிவியல் விடயங்களையும் உள்வாங்கி வெளிவரும் இலக்கின் பயணம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதோடு, தனது ஊடகப் பயணத்தினை இலக்கு அனைத்து தடைகளையும் தகர்த்து தங்கு தடையின்றி தொடரவேண்டும் என்பதும் எமது எதிர்பார்ப்பாகவுள்ளது.

தமிழர் தாயகத்திற்கும், தமிழகத்திற்கும், புலம்பெயர் நாடுகளுக்கும் இடையிலான உறவுப் பாலத்தை கட்டியெழுப்புவதனை கச்சிதமாக மின்னிதழ் ஒன்றிற்கூடாக மேற்கொண்டு வரும் இலக்கின் பயணங்கள் நீடிக்க வேண்டும் என்று மாணவர்களாகிய நாம் பிரார்த்தனை செய்வதோடு, தமிழ் சமூகம் சார்ந்த பற்றுறுதியுடனான குரலாக இலக்கின் பணி இன்றியமையாததொன்று என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகின்றது.

## பல்கலை மாணவரின் குரலாக திகழும் இலக்கு

### கிழக்குப் பல்கலைக்கழக மாணவரும், செயற்பாட்டாளருமான எம்.புவனராஜ்



இனவிடுதலைக்கான பயணத்தில் அண்மைய காலமாக அறத்துடன் பணியாற்றும் இலக்கு மின்னிதழில் இடைவிடாத முயற்சிகளும், வலிமையான எழுத்துக்களும் தொடர்தேச்சியான தாக்கத்தினை தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஏற்படுத்தி வருகின்றது.

இவ்வாறான நிலையில் தமிழர் தாயகத்தில் இனவிடுதலைக்கான பயணத்தில் வடக்குக் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்த பயணத்தினை முன்னெடுத்து வருகின்றார்கள். கணிசமான பணிகளை மேற்கொள்ளும் பாத்திரமேற்றுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் ஆயிரம் ஆயிரம்.

அவற்றைப் படம் போட்டுக்காட்டும் ஊடகமாக இலக்கு விளங்குவதோடு மட்டுமன்றி, மாணவர்களின் உரிமைகளுக்கான குரலாகவும் இலக்கு மின்னிதழ் செயற்பட தவறியிருக்கவில்லை. ஆகவே இன விடுதலையிலும், மாணவர்களின் சக்தி வலுப்படுத்துவதிலும் முக்கிய வகிபாகத்தினைக் கொண்டிருக்கும் இலக்கு தொடர்ந்தும் தனது நடுநிலையான பணியை முன்னெடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொள்கின்றேன்.

# இலக்கு மின்னிதழுக்கு தாயகத்தின் சிவில் சமூகத்தினர் வாழ்த்து

## தலைமையற்ற தமிழினத்திற்கு வழிகாட்டியாக இலக்கு

**அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல்**



2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்கு பின்னர் தமிழினம் தலைமைகளற்ற நிலையில் பரிதவித்துக் கொண்டிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து பத்தாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வினை அனுஷ்டிப்பதற்கு கூட யார் தலைமைதாங்குவது என்ற கேள்வியே இருந்தது.

இவ்வாறு தமிழ் மக்கள் தலைமைகளற்று உச்சபட்ச நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்கும் காலச்சூழலொன்று தற்போது ஏற்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் தமிழ் மக்கள் எந்த இலக்கு நோக்கிச் செல்ல வேண்டும். அதில் புலம்பெயர்ந்தவர்கள் எந்த வகிபாகத்தினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை வழிப்படுத்திய பாரிய பணியை கடந்த ஒருவருடமாக இலக்கு மின்னிதழ் முன்னெடுத்து வந்திருந்தது.

தமிழ் மக்கள் தமது அரசியல் சமூக விடயங்களிலிருந்து சிதறிச் செல்லாதிருப்பதற்கும் அதேநேரம், புலம்பெயர் சமூகங்களும் தயாக உறவுகளுடன் இணைப் பினைப் பேணி வலுவான குரலாக திகழ்வதற்குமான உறவுப்பாலமாகவும், வழிகாட்டியாகவும், இலக்கு மின்னிதழ் தொடர்ந்தும் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது.

ஆகவே அதுதொடர்பான புரிதலுடன் இலக்கு மின்னிதழ் தனது பொறுப்பான ஊடகப்பணியை முன்னெடுத்து தமிழ் மக்களின் பாதுகாப்பான எதிர்காலத்திற்கும் நீதியான, நேர்மையான தலைமைத்துவம் உருவாகுவதற்கும் செயற்பட வேண்டும் என்று வாழ்த்துக்களுடன் கோரிக்கை விடுகின்றேன்.

## நீதிக்கோரிக்கையின் குரலாக திகழ்கிறது

**மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் சங்கத்தின் தலைவி அமலநாயகி அமல்ராஜ்**



எமது உறவுகளை தொலைத்துவிட்டு இற்றைவரையில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காக தொடர்ச்சியான தேடல்களிலும், போராட்டங்களிலும் நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை தற்போது வரையில் அறிய முடியவில்லை.

எமது உறவுகளை தேடி அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காக நாம் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எமக்கான அரசியல் பிரதிநிதிகளின் குரல்களும், ஏனைய சுயலாமீட்டுபவர்களின் குரல்களும் மௌனமாகிவிட்ட நிலையில் எமது உறவுக்காக நாமே குரல்கொடுத்து வருகின்றோம். எமது உறவுகளை மீட்பதற்காக நாமே வீதிகளில் இறங்கி போராட்டங்களைச் செய்வது மட்டுமன்றி தொடர்ச்சியான வலியுறுத்தல்களையும் மேற்கொண்டு வருகின்றோம். இந்தப்போராட்டங்களையும், நீதிக்கான கோரிக்கைளையும் முன்வைக்கின்ற போது நாம் முகங்கொடுத்த பிரச்சினைகள் ஏராளம். அச்சுறுத்தல்கள், மலினப்படுத்தல்கள், கருத்தில்கொள்ளாமையென எம்மை உள ரீதியாக ஆயிரமாயிரம் விடயங்கள் பாதித்தன. இவற்றையெல்லாம் கடந்து எமது நீதிக்கான கோரிக்கையை நாம் முன்வைத்து வருகின்றோம். எமது நியாயத்தினையும், எமக்கு அளிக்கப்படும் அநீதியையும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தும் ஒரேயொரு ஊடகமாக இலக்கு உள்ளது.

இலக்கு எமது குரலாக வெளியாகி ஆண்டொன்று கடந்து விட்டது. அதன் பணி தொடர்வதோடு எமது நீதிக்கான போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் அதன் பங்களிப்பும் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

## ஈகைச் சுடரேற்றும் தகுதி கூட்மைப்புக்கு இல்லை

**மாவீரர்களின் உறவினர்கள் அறிவிப்பு**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளை சிறீலங்காவின் நாடாளுமன்றத்தில் பயங்கரவாதிகள் என்று நாக்கு கூசாமல் உரையாற்றினர். எனவே கூட்டமைப்பின் எந்தவொரு உறுப்பினர்களும் தம் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர் செல்வங்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றுவதற்கு அருகதையற்றவர்கள் என்று அந்த உன்னதமானவர்களை நினைவு கூரும் புனிதமான நிகழ்வில் இவர்கள் தமது காலடிகளை வைப்பதற்கு கூட தகுதி அற்றவர்கள் என்று மாவீரர்களின் உறவிர்கள் கண்ணீருடன் காட்டமாக அறிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில், எமது செல்வங்களான மாவவீர்கள் தமது உயிர்களை தமிழினத்தின் விடுதலைக்காக தியாகம் செய்திருக்கின்றனர். இன்றுவரை அந்தக் கனவுகள் நனவாகவில்லை. எமது போராளிகள் ஒருங்கிணைத்தார்கள் என்பதற்காக நாம் கூட்டமைப்பினை அங்கீகரத்து எமது ஆணையை வழங்கினோம். அதுமட்டுமன்றி அவர்களின் கனவுகளை நனவாக்குவோம் என்ற வாக்குறுதிகளை அள்ளிவழங்கியே எமது வாக்குகளைப் பெற்றே ஒவ்வொரு முறையும் நாடாளுமன்றத்திற்குச் செல்கின்றார்கள். ஆனால் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு அரங்கேறி பத்தாண்டுகள் ஆகின்ற போதும் அதற்கு நீதி கிடைக்கவில்லை. விடுதலைக்கான கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை. இந்த தலையாய கடமையினை மேற்கொள்வதற்கு பதிலாக, ஐ.நா மன்றத்தில் நீதிக்கோரிக்கையை மலினப்படுத்தி சிங்கள பெருந்தேசிய வாதிகளை பிணையெடுக்கும் வகையில் கால அவகாத்தினை கூட்டமைப்பே வழங்கியது.

அத்துடன் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் தமது சுயலாப அரசியலை முன்னெடுப்பதற்காக சிங்கள, பேரினவாத பௌத்த முன்னுரிமை அரசிடம் கூட்டமைப்பு சரணாகதியடைந்திருந்தது. அதன்பின்னர் ஜனாதிபதி தேர்தலிலும் தமது ‘நிதி நிலைமைகளை’ ஆராய்ந்து தீர்மானங்களை எடுத்தது கூட்டமைப்பு. இதனால் தமிழினமே இன்று தலைமையற்ற ஏதிகளாக இருக்கின்றது. நீதிக்கோரிக்கையும், அபிலாசைகளும் கையறு நிலையில் அடுத்தது என்ன செய்வது என்று தெரியாது தடுமாறிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலைமைக்கு காரணமானவர்கள் மறவர்களின் நினைவேந்தலில் கலந்துகொள்வதும், அவர்களுக்கு அஞ்சலிகளை செலுத்துவதும் எந்தவகையில் நியாயமாகும். இம்முறை நினைவேந்தல் நிகழ்வில் நெருக்கடிகள் இருக்கும் என்பதை நன்கறிந்துகொண்டு கூட்டமைப்பின் அங்கு பிரசன்னமாகி அரசியல் சுயலாம் ஈட்டப்பார்க்கின்றார்கள் என்பதே உண்மையாகும். ஆகவே அவர்களுக்கு சுயகௌரவம், மனச்சட்சி என்பன இருந்தால் இந்த நிகழ்விலிருந்து விலகியிருப்பதே அவர்களின் அரசியலில் அறமான செயற்பாடாக இருக்கும் என்று கருதுகின்றோம். என்று கூறியுள்ளனர் மாவீரர்களின் உறவினர்கள்.

**சிவில் சமூகத்தின் குரலுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருவது இலக்கின் விசேட அம்சமாகும்**

**சிவில் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் வி.நவநீதன்**



போர் நிறைவுக்கு வந்து பத்தாண்டுகளாகிவிட்டன. தமிழ் மக்கள் முகங் கொடுக்கும் பிரச் சினைகள் இன்னமும் தொடர்ந்துகொண்டு தான் இருக்கின்றன. போரும் இல்லாத, சமாதானமும் இல்லாத சூழலில் மக்களின் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி அதன் குரலாக இலக்கு மின்னிதழ் வாராவாரம் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் பல்வேறு ஊடகங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சாந்து குரல்கொடுத்து வருகின்ற அதேநேரத்தில் இலக்கு மின்னிதழும் சிவில் பிரதிநிதிகளுக்கும், மக்களின் குரல்களுக்கும் முக்கியத்துவம் அளித்து வருகின்றமையானது விசேட அம்சமாகும். அரசியல் விருப்பு வெறுப்புகளின்றி, இலபநோக்கின்றி மக்கள் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவந்து மக்களின் குரலாக இருக்கும் இலக்கு மின்னிதழ் தமிழ் மக்களின் அபிலாஷைகளின் காலக்கண்ணாடியாக இருந்து வருகின்றது. இவ்வாறான பணியை தொடர்ந்து இலக்கு மின்னிதழ் முன்னெடுக்க வேண்டும் என்பதோடு தமிழ் மக்களின் இலக்கை அடையும் வரையில் அனைத்து ஊடக தடைகளையும் கடந்து அப்பணி நீடிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

## இலக்கு மின்னிதழுக்கு எமது நல்வாழ்த்துகள்

**சி.த.காண்டீபன், சுயாதீன ஊடகவியலாளர்**



தமிழ் தேசியத்தின் பாதையில் தமிழ் தேசியத்தை மேலும் உயிர்ப்புடன் வைத்துக் கொள்வதற்காகவும், தமிழ்த் தேசிய சிந்தனையையும், அதன் இருப்பையும் தனது பிரதான இலக்காகக் கொண்டு வெளிவரும் இலக்கு மின்னிதழுக்கு எமது முதலாம் ஆண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழ்த் தேசிய பாதையில், எத்தடை வரினும் பல்லாண்டு காலம் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும் என்றும் இந்த வேளையில் இலக்கு மின்னிதழுக்கும், இலக்கு மின்னிதழ் குழுமத்தையும் வேண்டிக் கொள்கிறோம்


2 ம்பக்கத்தொடர்ச்சி

கட்டுப்பாட்டு தரப்புக்கள் ஊடாக புதிய சனாதிபதி கோத் தாபயவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனினும் புதிய சனாதிபதி கோத்தாபாயவோ புதிய பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்னவோ இதுபற்றி இன்னமும் உத்தியோகப்பூர்வமான உத்தரவினை (இந்தச் செய்தி பதிவேற்றும் வரையில்) அறிவிக்கவில்லை என்று உள்ளகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. எனினும், தற்போது கோத்தாயவின் வருகையின் பின்னர் நியமிக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு கட்டமைப்பின் புதிய அதிகாரிகள் அனைவருமே நினைவேந்தல் நிகழ்வுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட அறிக்கைகளையே தாயரித்து வைத்துள்ளதாகவும் அடுத்த கூட்டத்தில் அதனை சனாதிபதியிடத்தில் கையளிப் பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இலக்கு மின்னிதழுக்கு அரசியல் தலைமைகள் வாழ்த்து

## தமிழ்த் தேசியத்தின் உயிர்த்துடிப்பாக இலக்கு

**வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நீதியரசர்.க.வி.விக்னேஸ்வரன்**



மின் இதழாக வெளிவரும் இலக்கு ஒரு வருடத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து இரண்டாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றது. தாயகத்திலும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் வசிக்கும் தமிழர்களை இணைக்கும் ஒரு வாரப் பத்திரிகையாக மட்டு மன்றி, தமிழ்த் தேசியத்தின் உயிர்த்துடிப்பாகவும் இலக்கு இருந்து வருகின்றது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் உலகம் வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் நிலையில், ஊடகங்களும் அந்த மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க வேண்டியவையாகவுள்ளன. அந்த மாற்றங்களை ஏற்றுக்கொண்டு அவையும் மாற்றங்களைச் செய்யாவிட்டால், காலவோட்டத்தில் அவை காணாமல் போய்விடலாம். இலக்கு இன்று தனது இலக்கில் வெற்றிகரமாகப் பயணிப்பதற்கும் தகவல் தொழில்நுட்ப யுகத்தின் மாற்றங்களை ஏற்றுக்கொண்டுள்ளமையும் ஒரு காரணம்.

பத்திரிகை ஒன்றுக்கு இருக்க வேண்டிய பாரம்பரியங்களைத் தொடர்ந்தும் பேணிவரும் இலக்கு, காலத்தின் தேவைக்கு ஏற்ப, அதனை ஒரு மின்னிதழாக வெளியிடுகின்றது.

இன்று ஈழத் தமிழர்கள் இலங்கையில் மட்டும் இல்லை. உலகம் முழுவதும் பரவி வாழ்கின்றார்கள். அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுடைய அரசியல் இலக்கு ஒன்றாகத்தான் இருக்கின்றது. அந்த இலக்கில் அவர்களை அணிதிரட்டிக்கொண்டு செல்வதற்கும், அவர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிப்பதற்கு ஊடகம் ஒன்று அவசியம். அதனை இலக்கு திறம்படச் செய்துகொண்டிருக்கின்றது.


தாயகத்தில் என்றுமில்லா தளவுக்கு நெருக்கடிகள் அதிகரித்திருக்கின்றது. திட்டமிட்ட முறையில் குடியேற்றங்கள், நில அபகரிப்புக்கள், தாயகக் கோட்பாட்டையே இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் மிகவும் நுட்பமாக முன்னெடுக்கப்படுகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு முடிவைக்காணமுடியவில்லை. அரசியல் தீர்வு கானல்நீராகப் போய்விட்டது.

ஆனால், எல்லாப் பிரச்சினைகளுமே தீர்க்கப்பட்டு விட்டதாக பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது போன்ற பிரச்சினைகளை அம்பலப்படுத்துவதிலும், மக்கள் மத்தியில் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி அதற்கு எதிரான போராட்டங்களுக்குத் தூண்டுவதிலும் ஊடகங்களின் பங்கு முக்கியம். அதிலும் குறிப்பாக புலம்பெயர்ந்த எமது உறவுகளுக்கு இச்செய்தி கொண்டு செல்லப்பட வேண்டும். அதனை இலக்கு கடந்த ஒரு வருடத்தில் திறம்படச் செய்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

காலத்தின் தேவைக்கு ஏற்ற இந்த செயற்பாட்டை அவர்கள் தொடர்ந்தும் முன்னெடுக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## இலக்கு தனது இலக்கை அடைய வாழ்த்துக்கள்

**ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்**



புலம்பெயர் நாடுகளிலும், தாயக மண்ணிலும் வாழும் ஈழத் தமிழர்களையும், தமிழகம் உள்ளிட்ட உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழும் தமிழர்களையும் ஒன்றிணைக்கும் பாலமாக இலக்கு மின்னிதழ் திகழ்கிறது. இன்று அது தனது முதலாவது ஆண்டை நிறைவு செய்கிறது. வாரந்தோறும் வெளிவரும் இலக்கு ஒவ்வொரு முறையும் தமிழ்த் தேசிய உணர்வையும், சர்வதேச அரசியலையும், தாயகத்தின் அரசியல் நிலைகளையும் தெள்ளத் தெளிவாக வெளிக் கொணர்வதில் வெற்றியடைந்துள்ளது.

இந்த ஒரு வருட காலத்தில் அது எதிர்கொண்ட சவால்கள் ஏராளம். பல தடைகள், பல்வேறு விதமான விமர்சனங்கள், அதன் வளர்ச்சியைத் தடுப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்று பல வித சோதனைகளைக் கடந்து தனது இடையறாத உழைப்பின் காரணமாகவும், பற்றுறுதியின் காரணமாகவும் தொடர்ந்தும் பீடுநடை போடுகின்றது.

கடந்த ஆண்டு ஒட்டுமொத்த இலங்கை அரசியல் நிலையை நடுநிலையோடு நின்று உலகறியச் செய்ததில் இலக்கின் பங்கு மகத்தானது. தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்கீழ் ஐக்கியப்பட்டிருந்த சூழலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உண்மையான முகத்தை பல்வேறு பத்தி எழுத்தாளர்கள் மூலம் தோலுரித்துக் காட்டியதுடன், வேறுவழியின்றி, இரண்டு அங்கத்துவக் கட்சிகளும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான முடிவுகளுக்கு அடிபணிந்ததையும் அவர்கள் தெள்ளத்தெளிவாக அனைத்துத் தரப்பினரும் புரிந்துகொள்ளும் வகையில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

தாயகத்தில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களும், அரசியல் நிகழ்வுகளும் கிழமைதோறும் முழு உலகத்திற்கும் கொண்டு சேர்ப்பதில் இலக்கு தனது பணியினைச் செவ்வனே செய்துள்ளது. இனிவரும் காலங்களிலும் இலக்கு தனது இலக்கை நோக்கி வீறுநடைபோட வாழ்த்துக்கள்.

## இலக்கு மின்னிதழ் தாயக மக்களின் குரலாக வெளிவருகிறது

**ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன்**



தாயக வாழ் தமிழ் மக்கள் தற்போது அரசியல் அநாதைகளாகி விட்டனர். எதிர் காலத்தில் தமது பாதுகாப்பினையும், நீதிக்கான கோரிக்கையையும் எவ்வாறு கொண்டு நகர்த்துவது என்பதை அறியாது செல் நெறியின்றி தவித்து வருகின்றார்கள். அரசியல் ரீதியான போட்டித் தமையான பாகுபாடுகளும், தனி நபர்களுக்கு இடையிலான நெகிழ்ச்சியற்ற மனநிலையும் இன விடுதலைக்கான பயணத்தின் பற்றுறுதியை மலினப்படுத்துவதாகவே அமைகின்றது.

இதற்காக ஒருவர்மீது ஒருவர் சேறுபூசுதல், நேர்மையான, உண்மையான கருத்துக்களையும், போராட்டங்களையும் இருட்டடிப்புச் செய்தல் போன்ற ஊடக கலாசார செயற்பாடுகளால் தாயக தேசத்தில் இனப்படுகொலைக்கு முகங்கொடுத்த, சிங்கள தேசத்தின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் தற்போதும் தொடரும் இனவழிப்புக்கு உள்ளாகி வரும் இனத்தினை தமிழினத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. இனவிடுதலை பற்றுறுதியிலிருந்து விலகி வேறொரு பாதையில் ஊடகங்களின் பயணம் சென்று கொண்டிருக்கும் துர்ப்பாக்கியமான சூழலில் இலக்கு மின்னிதழ் புலம்பெயர் தேசத்திலிருந்து எம்மினத்தின் குரலாக வாரந்தோறும் வெளியாகிக் கொண்டிருக்கின்றது.

புலம்பெயர் தேசத்திலிருந்து ஆயிரம் ஆயிரம் ஊடகங்கள் உருவெடுத்தாலும் ஏதோவொரு மறைமுக நிகழ்ச்சி நிரலுக்குள்ளே நின்று சுழலும் போக்கு நீடித்துக் கொண்டிருக்கையில், தமிழ்த் தேசிய அரசியலுக்கு புடம் போடும் வகையிலும், தாயக உறவுகளின் குரலாகவும் இலக்கு தொடர்ச்சியாக நடுநிலை தவறாது வெளியாகின்றது. இத்தகைய உயரிய ஊடக தர்மத்துடன் இலக்கு முதலாவது ஆண்டை நிறைவு செய்துள்ளது. அதற்கான வாழ்த்துக்களை கூறுவதோடு இலக்கு தொடர்ச்சியாக தாயக தமிழினத்தின் விடுதலைக்கான தனித்துவக் குரலாக செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

## இலக்கு மின்னிதழின் அரசியல் சமூகப்பணி தொடரவேண்டும்

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்**

தமிழ் தேசிய அரசியல் பரப்பில் வாராந்தம் தயாகத்தில் நடைபெறும் விடயங்கள் அனைத்தையும் தொகுத்து அளிப்பதுடன் உண்மையை நேர்மையுடன் மக்களுக்கு கூறிவரும் மின்னிதழாக இலக்கு கடந்த ஒருவருடமாக தனது ஊடக பணியை முன்னடுத்து வந்தது. அப்பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இதயபூர்வமாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் தமிழ்த் தேசிய அரசியலை இளம் சந்ததியினருக்கு ஊட்டும் பணியையும் நீதிக்காக குரல்கொடுக்கும் மக்களின் குரலாகவும் தனது பணியை முன்னெடுத்து வரும் இலக்கு அப்பணியை இடைவிடாது தொடரவேண்டும் என்றும் வலியுறுத்த விரும்புகின்றேன்.



தமிழ் மக்களின் இனவிடுதலைக்கான பயணத்தில் இவ்வாறான உணர்வு மிக்க ஊடகங்களின் பணிகள் அளப்பரியனவாக உள்ளன. அத்தகைய பாரிய பணியை இலக்கு மின்னிதழ் தொடர்ந்தும் மேற்கொண்டு அதன் இலக்குகள் வெற்றியடைய வேண்டும் என்றும் மீண்டுமொரு தடவை வாழ்த்துகின்றேன்.

# இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன் வரலாறு எனது வழிகாட்டி

தலைநிமிர்வுடன் தமிழீழ மக்களின் அடையாளமாகவும், தமிழர்களைத் தனிப்பெரும் சக்தியாக உலகிற்கு அடையாளப்படுத்திய அமைப்பாக விளங்குகிறது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு. தமிழர் வரலாறு காணாத வகையில் வீரத்தை நிலைநிறுத்தி புதிய புறனானூற்றைப் படைத்தவர் எங்கள் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள். உலகெங்கும் வாழும் தமிழர்கள் மத்தியில் தமிழ்த் தேசிய உணர்வினையும், தமிழ்மொழி உணர்வினையும், தமிழின விடுதலை உணர்வையும், வீரத்தையும் ஊட்டித் தலை நிமிரவைத்த வரலாற்றுப் பெருமை அன்றும், இன்றும், என்றும் தமிழரின் தன்னிகரில்லாத் தலைவரை மட்டுமே சாரும்.

“உண்மையானவராக இருந்தால் அவர் இலட்சியத்திற்காகச் இறந்திருக்க வேண்டும். அல்லது இலட்சியத்தை அடைந்திருக்க



வேண்டும்' என்று அடிக்கடி கூறுவார். 'இப்படிப் பார்த்தால் எங்களில் மாவீரர்கள் தான் உண்மையானவர்கள்— உயர்ந்தவர்கள்' என்பார்.

'நானும் உண்மையானவனல்லன்' என்று தன்னைப் பற்றியுக் கூறுவார்'. அவரது இக்கூற்றுக்கள் மாவீரர்களை முதன்மைப் படுத்துவதையும் — இலட்சியத்தின் மீதான உறுதிப்பாட்டையுமே காட்டுகின்றன. தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் அற்புதமான இராணுவ வல்லுநரென்பதை உலகமே ஏற்றுக் கொண்டுவிட்டது.

மூன்று தசாப்த கால விடுதலைப் போராட்டமானது, தமிழர் சார்பில் சாதக பாதக விடயங்களைக் கொண்டிருந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில் மதிக்கப்பட்ட உறுதிமிக்க தலைவராக தமிழீழ தேசியத் தலைவர் எப்போதும் நிமிர்ந்து நிற்கிறார். தலைவர் தமிழ் மக்களுக்கான விடுதலைப் பாதையை சீரான பாதையில் நடத்திச் செல்கின்ற ஒரு அச்சாணியாகச் செயல்பட்டவர். அரசிற்கு விலை போகாத மாபெரும் தலைவர் என தமிழ் மக்களால் போற்றப்பட்டு, ஆதரவளித்து. உறுதுணையாக நின்றனர் என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தனக்குள்ளேயும் தன்னைச் சுற்றியும் கடுமையான ஒழுக்க நெறிகளை பின் பற்றியிருந்த தலைவர், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெண் போராளிகளையும், தமிழீழ தேச வாழ் மக்களையும் கண்ணியத்துடன் நடத்தினார் என்றால் அது மிகையாகாது. தலைவரின் அற்புதமான தன்னம்பிக்கையும், உள்ளுணர்வுடன் அத்தனை போராளிகளையும் ஈழத் திருநாட்டின் பிள்ளைகளாகவும், தனது பிள்ளைகளாகவுமே எண்ணி அத்தனை போராளிகளையும் மனிதநேயத்துடன் நடத்தினார்.

புரட்சிகளை, விடுதலைப் போராட்டகால சமூ கமாற்றங்களைப் பற்றி நாம் பேசிக் கொள்ளும்போது அவற்றை முன்னின்று நகர்த்திய ஆற்றல்மிக்க ஆளுமைமிக்க தனித்துவம் மிக்க போராளிகளைக் கொண்டு போர் நடக்கும் எந்தவொரு தேசத்திலும் சாத்தியமாக்கப்படாத மனிதாபிமானச் செயற்பாடுகள் தழிழீழத்தில் தலைவர் அவர்களின் வழிநடத்தலில் நிகழ்த்தப்பட்டுள்ளது.

தலைவர் தமிழ் மக்களின் சார்பாக அடக்கு முறையாளர்களுக்கு எதிராக எழுந்து நிற்பவர் மாத்திரமல்ல, தமிழர்கள் மதிப்போடும், மாண்போடும் வாழ ஒரு தேசியத்தைக் கட்டியெழுப்பிய தலைவருமாக மக்களின் பேராதரவோடும், மக்களுக்கான உள்கட்டுமானப் பணிகளில் மனிதநேய பணிகளை மிகச்சிறப்பாக வடிவமைத்து செயற்படுத்திய பெருமைக்குரியவர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் பல உண்டு.

**நிலவன்**

தமிழீழம் எனும் தமிழர் தாயக பூமி, முழுமையான விடுதலையைக் காண்கின்ற வேளையில் அங்கே ஆதரவற்றர்கள், இயலாமையில் வாழ்பவர்கள், ஏழைகள், கைவிடப்பட்ட முதியோர்கள் கையேந்தி நிற்பவர்கள் என்று யாருமே இருக்கக்கூடாது. போரினால் ஏற்படும் நிரந்தரமான தாக்கங்களுள் மக்கள் நசுங்கிப்போக இடமளிக்கக் கூடாது. மாறாக எல்லா வகையிலும் தலைசிறந்த நாடாக இந்த உலகிற்கே முன்மாதிரியான ஒரு நாடாக தமிழீழம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மிகமிக உறுதியாக இருந்தார்.


உரிமைப் போர் வளர்ந்து விருட்சமாகி தரை, கடல், வான் என விரிந்து பல்வேறு இராணுவ துறைசார், மக்கள் சார் கட்டமைப்புகளாக விரிந்து, தமிழர்களுக்கான தாயகம், தேசியம், தன்னாட்சி, உரிமை என்ற அடிப்படைக் கோரிக்கைகளுக்காக போராடிய சம நேரத்தில், மண்வளம், மக்களின் வாழ்க்கை முறைமை வாழ்வாதாரம், கல்வி. கலை, பண்பாடு, மருத்துவம் என எல்லாவற்றிலும் அதிக அக்கறை செலுத்தியிருந்தார்.


ஒருபுறம் மண் மீட்பிற்கான விடுதலைப் போரை நடாத்திக் கொண்டு, மறுபுறம் தமிழீழத்தின் எதிர்காலத்தைச் சிறப்பான முறையிற் கட்டியெழுப்பும் பணிகளைச் செவ்வனே மேற்கொண்டிருந்தார் தலைவர் அவர்கள். அவ்வாறு தமிழீழ தனி அரசின் செயற்பாடுகளில் சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாக இருக்கும் என நினைக்கின்றேன். சூழலையும் மக்களையும் பாதுகாப்பதிலும் சூழலுக்கு பங்கம் விளைவிக்கும் பொருட்கள் சொப்பிங்பேக், லஞ்ச் சீட், ரெஜிபோர்ம் உணவுப் பெட்டி ஆகியவை முற்று முழுதாக தடைசெய்யப்பட்டுள்ளன. இவற்றை உற்பத்தி செய்யவோ, விற்பனை செய்யவோ முடியாது. அவற்றை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், அல்லது பொதி செய்து கொடுத்தல், சட்டவிரோதமான செயற்பாடாகும். இவற்றிற்கு மாற்றீடாக விரைவில் உக்கிப் போக்கும் தன்மை கொண்ட விசேட பொலித்தீன் வகை பாவனையினை ஈழதேசம் கொண்டிருந்தது.

தமிழீழ தேசத்தில் உருவான கல்விக் கூடங்கள் ஏராளம். அந்தவகையில் காந்தரூபன் அறிவுச்சோலை (ஆதரவற்ற ஆண் குழந்தைகளுக்கானது), செஞ்சோலை (ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கானது),செந்தளிர் (ஐந்து வயதிற்குட்பட்ட ஆதரவற்ற

**தொடர்ச்சி அடுத்த பக்கம்...**






# இலக்கோடு உறவாடும் பல்கலைக்கழக மாணவர்களும், வாசகர்களும்







8ம் பக்கத் தொடர்ச்சி.. இயற்கை

குழந்தைகளுக்கானது), வெற்றிமனை (வலுவிழந்தோருக்கானது) அன்பு முதியோர் பேணலகம். இனிய வாழ்வு இல்லம், சந்தோசம் உளவளமையம் (மனநோயாளிகளுக்கானது), நவம் அறிவுக் கூடம் (பார்வை இழந்த போராளிகளுக்கானது), மயூரி இல்லம் (இடுப்பின் கீழ் வலுவிழந்த பெண் போராளி களுக்கானது), சீர்திருத்தப்பள்ளி, முரளி முன்பள்ளி (ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்பப்பள்ளி), உதய தாரகை (விதவைகளுக்கானது), பெண்கள் மறுவாழ்வு அபிவிருத்திமையம், பசுமை வேளாண் சேவை(விவசாயிகளுக்கானது), எழுகை தையல் பயிற்சிமையம். இது போன்று பலபிரிவுகளைக் கொண்ட சமூக, கல்வி, பொருளாதார, அபிவிருத்தி சார்ந்து மக்கள் நலன்சார் அமைப்புக்கள் பல தமிழீழ நிழல் அரசின் காலத்தில் தலைவர் அவர்களின் சிந்தனையின் செயல்வடிவத்தில் உருவாக்கி அதனை செவ்வனே வழிநடத்தியிருந்தார்கள்.

பாதிப்புக்குள்ளான, உள்ளாகிக் கொண்டிருக்கின்ற, உள்ளாகக்கூடிய மக்களுக்கான சமூக, மருத்துவம், கல்வி, பொருளாதாரம், புனர்வாழ்வு பணிகளை கட்டமைப்புக்குள் கட்டமைக்கப்பட சிறந்த திட்டமிடலுடன் மக்கள் போற்றும் நற்பண்புகளுடன் தேசத்தின் நிர்மானிகளாகவும் உருப்பெற்று மக்களுக்குப் பெரும் பணியாற்றிட சிறந்த ஆளுமைகளை தேசத்தின் சிற்பங்களாக உருவாக்கிதன் நலமற்ற சேவையினை வழங்குவதில் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குஈடாக ஒருநிழல் அரசு ஈழத்தில் மனிதநேயப்பணிகளில் செயற்பட்டுக் கொண்டிருந்தது என்பதை ஈழத்தில் வாழ்ந்தவர்கள் நன்கு அறிவார்கள்.

காந்தரூபன் அறிவுச்சோலையின் முத்துக்களில் நானும் ஒருவன் என்பதிலும் அன்னையின் வளர்ப்பில் மட்டுமல்ல அண்ணாவின் வளர்ப்பிலும் வளர்ந்தவன் என்ற கர்வம் எனக்கு உள்ளது. மேஜர் காந்தரூபன் அவர்கள்தானே விரும்பி தலைவரிடம் கேட்டு கரும்புலியாய் இலக்கு நோக்கி விரையுமுன் தலைவர் அவர்களிடம் பகிர்ந்து கொண்டபோது தனது ஆசை, தாய் தந்தையரைப் பிரிந்து, இழந்து வாழும் குழந்தைகளுக்கு ஓர் இல்லத்தை அமைத்து அவர்களை நல்லமனிதர்களாக உருவாக்க வேண்டுமென்பது என கேட்டதற்கு தலைவர் அவர்களின் எண்ணக்கருக்களில் ஒன்று மேஜர் காந்த ரூபனின் கனவாக மலர்ந்தது.

விளையாட்டு ஊக்குவிப்பு, அபிவிருத்தி, அணிகள் உருவாக்கம், நிகழ்வுகள் போட்டிகள் ஒருங்கிணைப்பு, மாவட்ட தேசியமட்ட ஒருங்கிணைப்பு நல்லொழுக்கம், நல்மனப்பாங்கு, நற்பண்புகள், ஆளுமைத்திறன், துணிச்சல் முற்போக்குச் சிந்தனை போன்ற வற்றை மேம்படுத்துவதற்கு ஏதுவானசிறப்பான செயற்பாடுகளுடன் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சிநகரிலிருந்து 4 கிலோ மீற்றர்கள் தூரத்தில் நகரின் மேற்கேகிருஸ்ணபுரம் என்னும் கிராமத்தில் அமையப்பெற்ற நவம் அறிவுக்கூடம்.முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்திருந்த இந்திய இராணுவமுகாம் மீதான தாக்குதலில் விழுப்புண்பட்டு தமிழகத்தில் சிகிச்சை பெற்று வந்த வேளை 15.05.1989 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்.கேணல் நவம் அவர்களின் ஞாபகார்த் தமாக “நவம் அறிவுகூடம் தேசியத்தலைவர் அவர்களினால் உருவாக்கப்பட்டது.

லெப் கேணல் நவம் அவர்கள் போராட்டத்திலே தனது ஒருகரத்தினை இழந்தவர். தாயகமீட்பு போரிலே அவையங்களை இழந்த போராளிகளைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் உருவாகிய ஒன்று. களமுனையில் காயமுற்று அவையங்கள் பாதிக்கப்பட்ட போராளிகளுக்காக புனர்வாழ்விற்கு ஆரம்பிக்கப்பட்டது. அங்கு பொதுக் கல்வி, கணினிப் பயிற்சி, தொழிற்கல்விக் கலைகள், தொழில் நுட்பம், ஆங்கில மொழிப்பயிற்சி, விளையாட்டுகள் எனப் பலதரப்பட்ட கற்கை நெறிகளும் ஆற்றுப்படுத்தல், மகிழ்வூட்டல், மற்றும் ஆளுமை விருத்தி செயற்பாடுகள் என அவர்களுக்காக அனைத்து புனர்வாழ்வு நடவடிக்கைகளும் அங்கு வழங்கப்பட்டது.

அகக் கண்களால் உலகைப்பார்க்கும் கவிஞர்கள். இசைக்கலைஞர்கள், பரதக்கலையில் வல்லுனர்கள் மட்டுமல்ல ஆசியர்களாகவும் இருந்துள்ளார்கள். முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட போராளிகள் கணனியைக் கையாள் வதில் மிகத் திறன் கொண்டவர்கள் உயிரோட்டமுள்ள ஓவியங்களை படைக்கின்றவர்களாகவும் இசைக் கருவிகளை கையாளக் கூடியவர்களாகவும் எதையும் துணிவுடன் எதிர்கொள்ளும் போராளியாக வாழ்வுநோக்கி வாழ்ந்தார்கள்.

போர்க் களத்தில் மக்களையும் மாற்றிட களமுனைகளில் காவல் தெய்வங்களாக வாழ்ந்தவர்கள், கந்தகக் குதறல்கள், சிதைவுகள், எத்தகைய பாதிப்புக்களை எதிர்கொண்டபோதும், அவற்றைக் கையாளவும், மறக்கச்செய்யும் அவர்களின் அவய இழப்புக்கள், ஈடுசெய்ய முடியாத போதிலும் அவர்களிடம் உள்ள ஆளுமைத் திறனைக் கொண்டும் அவர்களால் இந்த உலகை வெல்லமுடியும் என்ற தன்னம்பிக்கையை கட்டியமைக்கும் அடிப்படையில் அங்கு போராளிகள் கவனிக்கப்பட்டார்கள். படுகாயமடைந்த போராளிகளுக்கு உதவுவதற்காக பிரத்தி யேகமாக போராளிகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கான அனைத்துவிதமான புனர்வாழ்வு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டது.

போர்க்கால உள நெருக்கடிகளைக் கையாளும் வகையில் ஆற்றுப்படுத்தலும், கலை, கலாச்சார, பண்பாடு நிறைந்த பல உள ஆரோக்கியமான செயற்பாடுகள், தமிழீழ மண், தன்னகத்தே கொண்டு உரியமுறையில், தலைவர் அவர்களின் வழிநடத்தலில், ஒருகொடியின் கீழ் ஒருமித்த ஒருசக்தியாக உலக வல்லரசு நாடுகளுக்கு நிகராக மனிதநேயம் நிறைந்த பணிகளை தலைவரின் காலத்தில் நாம் அவரின் வழிகாட்டலில், போராட்டப் பணிசெய்து மகிழ்ச்சியும் திருப்தியும் கொள்வோம்.

# கோத்தபாயவின் வெற்றியை தொடர்ந்து எழுந்துள்ள ஊகங்களும், நிதர்சனமும்

**வேல்ஸ் இல் இருந்து அருஷ்**

சிறீலங்காவின் தேர்தல் முடிவுகள் அரசியலில் பல மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டுள்ள அதேசமயம், பூகோள ஆதிக்க சக்திகளின் ஒழுங்கமைப்பிலும் சிக்கலான நிலையை தோற்றுவித்துள்ளது போன்ற தோற்றப்பாடுகள் எழுந்துள்ளன.

இந்த தேர்தலில் பங்கெடுப்பதன் மூலம் தமிழினம் எதனையும் பெற்றுவிட முடியாது என்பதை நாம் 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலின் மூலம் கண்டறிந்தோம். மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து மைத்திரி — ரணில் தலைமையிலான நல்லாட்சி ஒன்றை அமைப்பதன் மூலம் தமிழ் மக்கள் தீர்வைப் பெற்றுவிடலாம் என்ற போலியான விம்பம் ஒன்று தமிழ் மக்களின் முன்னால் உருவாக்கப்பட்டது.

மேற்குலகம் சார்ந்த இந்த நிகழ்ச்சி நிரலில் தமிழ் மக்களை ஏமாற்றுவதில் தமிழ் அரசியல் வாதிகளும் ஒத்துழைப்புக்களை வழங்கினார்கள், தமது துன்பங்களுக்கு விடிவுபிறக்கும் என நம்பிய தமிழ் மக்கள் அதிகளவில் வாக்களிப்பில் ஈடுபட்டனர், 2010 ஆம் ஆண்டு 25 விகித வாக்களிப்பை கண்ட யாழ்மாட்டத்தில் 2015 ஆம் ஆண்டு 66 விகிதமாக அது உயர்ந்தது.

தமிழ் மக்களின் இந்த வாக்களிப்பின் முக்கிய நோக்கம் இனப்படுகொலையில் முக்கிய பங்குவகித்த மகிந்தவை பழிவாங்குதல், புதிய அரசின் மூலம் தமக்கான ஒரு தீர்வை காண்பது என்பவையே, ஆனால் மகிந்தாவை தூக்கியெறிந்த எம்மால் தீர்வை புதிய இனவாத அரசிடம் இருந்து பெறமுடியவில்லை. இந்த நிலையில் தான் சிங்களத் தலைவர்கள் எல்லோரும் இனவாதத்தில் மூழ்கியவர்கள். எனவே அவர்களை நம்பமுடியாது என்பதால் தேர்தலை புறக்கணிப்பது அல்லது தமிழர் ஒருவருக்கு வாக்களிப்பது என்ற திட்டம் முன்வைக்கப்பட்டது.

ஆனால் தேர்தலில் கோட்டபாய களமிறங்கியது தமிழ் மக்களை மீண்டும் பழிவாங்கும் நிலைக்கு தள்ளியதுடன், அவர் அரச தலைவரானால் மீண்டும் ஒரு போர் உருவாகும் என்ற அச்சமும் எதிர்த்தரப்பால் தமிழ் மக்களின் மனங்களில் விதைக்கப்பட்டது. பல கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படும். கொழும்பில் உள்ள தமிழ் மக்களின் சொத்துக்கள், வர்த்தகங்கள் பாதிக்கப்படும் என்ற தகவல்களும் தமிழ் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது.

எனவே புறக்கணிப்பை கைவிட்ட தமிழ் மக்கள் கோட்டபாயவை தோற்கடிக்க வேண்டும் என்ற மன நிலைக்குத் தள்ளப் பட்டனர். 2015 ஆம் ஆண்டு போலவே வாக்களிப்பில் கலந்து கொண்டனர், சிங்களவர் ஒருவருக்கு வாக்களிக்க மனம் விரும்பவில்லை என்றாலும், அவர்களின் மனங்களில் விதைக்கப்பட்ட அச்சமும், மகிந்த குடும்பத்தின் மீது கொண்ட தீராத பகையும் மற்றுமொரு சிங்களவருக்கு வாக்களிக்க மக்களைத் தூண்டியது. 2019 ஆம் ஆண்டின் வாக்களிப்பு விகிதம் 68 விகிதமாக யாழில் பதிவாகியது.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ் மாவட்டத்திலேயே குறைவான விகித வாக்குகள் பதிவாகியுள்ளன. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏறத்தாள 30,000 செல்லுபடியான வாக்குகளே அதிகம் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் வாக்களிக்கத் தகுதியானவர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்புடன் இதனை ஒப்பிட்டால் அதிலும் பல சிக்கல்கள் தோன்றலாம். அதாவது தமிழினம் அச்சம் மற்றும் பழிவாங்கும் படலம் போன்ற சிந்தனைகளில் மூழ்கி தனது இறைமையயும், பூகோள பிராந்தியத்தில் கொண்டிருந்த தனித்துவத்தையும் இழந்து நிற்கின்றது. ஏனெனில் சிங்களத் தலைவர் ஒருவருக்கு தமிழ் மக்கள் இவ்வளவு பெருமளவில் வாக்களித்தது இதுவே முதல்முறை என பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட த ரெலிகிராப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஆனால் சிங்கள இனம் மறுவளமாக நிமிர்ந்து நிற்கின்றது. அதாவது தனது இனத்தை ஆபத்துக்களில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக எதையும் இழக்கத் தயாராகும் மக்கள் சரித்திரம் படைப்பார்கள் என்பதற்கு அவர்களின் ஒற்றுமையும், செயற்பாடும் ஒரு எடுத்துக்காட்டாகும். 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை பொதுஜன முன்னணி என்ற கட்சி மூன்று வருடங்களுக்குள் வளர்ந்து 69 இலட்சம் வாக்குகளை அரச தலைவர் தேர்தலில் பெற்று இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது சிங்கள மக்களின் ஒத்துழைப்புக்களும், அர்ப்பணிப்புக்களுமின்றி சாத்தியமற்ற ஒன்று.



இந்த பெரும் வெற்றி என்பது, அமெரிக்காவும், இந்தியாவும் கொண்டுவந்த 19 ஆவது திருத்தச்சட்டத்தை கைவிட்டு ஓடவேண்டிய நிலையை ரணிலுக்கு ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் தமிழின அழிப்பு போரின் உச்சக்கட்டமான 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற போரின் பின்னர் 2010 ஆம் ஆண்டு பெரு வெற்றியீட்டிய மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மை பெற்று ஒருவர் அரச தலைவராக இருக்கலாம் என்ற 18 ஆவது திருத்தச்சட்டத்தை 2010 ஆம் ஆண்டு ஏப்பிரலில் கொண்டுவந்திருந்தார்.

ஆனால் சீனாவின் ஆதிக்கத்தை முறியடிப்பதற்காக நல்லாட்சி என்ற போர்வையில் மைத்திரிபால சிறீசேனாவும், ரணிலும் கைகோர்க்க வைக்கப்பட்டனர், மகிந்தாவின் 18 ஆம் திருத்தச்சட்டம் ஒழிக்கப்பட்டது, 19 ஆவது திருத்தச்சட்டம் 2015 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் கொண்டுவரப்பட்டது. அதாவது 19 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் அரச தலைவரின் அதிகாரம் குறைக்கப்பட்டது. அமைச்சரவையின் அல்லது நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி அரச தலைவர் பிரதமரை நீக்க முடியாது. அதாவது இரட்டை அதிகார நிலையைத் தான் 19 ஆவது திருத்தம் ஏற்படுத்தியிருந்தது.

தற்போதைய நிலையில் கூட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருந்தால் ரணிலை கோட்டபாய நீக்கவோ அல்லது நாடாளுமன்றத்தைக் கலைக்கவோ முடியாது. ஆனால் கோத்தா பெற்ற பெரும் வாக்குப்பலம் எதிர்த்தரப்பை மோதல்கள் இன்றி சரணடைவு நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. மிகப்பெரிய சிங்கள கட்சிக்கே இந்த நிலை என்றால் தமிழ் மக்களின் நிலை?

பூகோள அரசியலில் மாற்றம் ஏற்படலாம் என்கின்றனர் சிலர். கோத்தாவுக்கு எதிராக இந்தியா செயற்படும் என்ற தோற்றப்பாடுகளும் உருவாக்கப்படுகின்றன. தமிழகத்தின் அரசியல் பிரமுகர்களின் அறிக்கைகளும் தமிழ் மக்களை அவ்வாறு எண்ணத் தூண்டலாம்.

ஆனால் உண்மை எதிர்மறையானது என்பதே நிதர்சனம், 2018 ஆம் ஆண்டு மகிந்தா ராஜபக்ச தனது சகோதரர்கள், புதல்வர்கள் சகிதம் இந்தியா சென்று, இந்தியவின் ஆளும் மற்றும் எதிர்த் தரப்பு அரசியல் தலைவர்களையும், இந்திய அரசின் கொள்கை வகுப்பாளர்களையும், அவர்களின் ஊதுகுழலாகச் செயற்படும் சுப்பிரமணியன் சுவாமியையும் சந்தித்த பின்னரே 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அரசியல் கிளர்ச்சி ஒன்று தென்னிலங்கையில் நிகழ்ந்தது.

அது தோல்வியில் முடிந்ததும், வவுணதீவில் தாக்குதல் நிகழ்ந்தது, அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் கொழும்பில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்கள் முற்றுமுழுதாக சிங்கள வாக்காளர்களை மகிந்தவின் பக்கம் திருப்பிவிட்டுள்ளது. சீனாவிடம் வாங்கிய பல ஆயிரம் கோடி கடன்களை அடைத்து அதனை இந்தியா மீட்டது போன்றதொரு செயல்த்திட்டமே வேறு வடிவத்தில் படிப்படியாக சிறீலங்காவில் அரங்கேறியுள்ளது. அதனைத் தான் த இந்து பத்திரிகையின் ஆசிரியர் ராமும் கூறியிருந்தார். அதாவது கோத்தபாய ஆட்சிக்கு வந்தாலும் இந்தியாவின் அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை என்று.

அப்படியென்றால் அமெரிக்காவின் நிலை? சிறீலங்கா மீதான அமெரிக்காவின் தலையீட்டைப் பொறுத்தவரையில் இந்தியா ஒரு எல்லை வரையுமே அதனை அனுமதிக்கும். மிலேனியம் சலஞ் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி அமெரிக்கப் படையினர் சிறீலங்காவில் சுதந்திரமாக நடமாட இந்தியா அனுமதிக்குமா? என்பது கேள்விக்குறியானதே.

ஆனால் அமெரிக்காவின் கையில் கோட்டபாயாவும் அவரின் படையினரும் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் என்ற ஆயுதம் உண்டு. அதனைக் கொண்டு அமெரிக்கா அவரைப் பணியவைக்குமாக இருந்தால் இந்தியா அடுத்த கட்டத்திற்கு நகரவேண்டிய நிலை ஏற்படும். அதற்கான அடித்தளம் தான் தமிழகத்தில் ஒலிக்கும் குரல்களின் பின்னனி. இந்து ராமும் அதனை மறைமுகமாக கூறிச் சென்றுள்ளார். அதாவது தமிழ் மக்கள் தமது அதிகாரப் பகிர்வை பெறுவதற்கு தொடர்ந்து போராடவேண்டும் என்று கூறியுள்ளார்.

# இலக்கு மின்னிதழுக்கு புலம்பெயர் சமூகம் வாழ்த்து

## தாயகம், தமிழகம் புலம்பெயர் தேசத்தை இலக்கு இணைக்கிறது

**திருச்சோதி,**
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையின் சர்வதேச விவகாரங்களுக்கான இணைப்பாளர்



ஈழத் தமிழரின் விடுதலையை இலக்காகக் கொண்டு வெளிவரும் ஒரு வார இதழாக, மக்கள் மயப்படுத்தப்பட்ட இணையங்கள் ஊடாக எல்லோரின் பார்வைக்கும், எடுத்து செல்லும் ஊடகமாக திகழும் "இலக்கின்" சேவையை பாராட்டியே ஆக வேண்டும். தாயகம், தமிழகம் மற்றும் புலத்தின் செய்தி களையும் இணைக்கும் தளமாக இந்த வார இதழ் விளங்குகிறது.

இந்த நூற்றாண்டில் உலக ஊடகங்களை எவர் தனக்கு கட்டுபட்டதாக்கிக் கொள்கிறாரோ அவருக்கு உலக நாடுகள் எல்லாம் சொந்தமாகி விடும் என்ற நிலையை நாம் பார்க்கிறோம். அப்படியானால் உலகத்தின் வளர்ச்சி எந்தளவுக்கு முன்னேறிச் செல்கிறதோ அந்தளவு ஊடகங்களின் பங்கும் காணப்படுகின்றது என்பதை இதிலிருந்து நாம் தெட்டத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

இத்தகைய சக்திவாய்ந்த ஊடகங்கள் இன்று ஒரு சிலரின் கையில் மட்டுமேயுள்ளது. அவை மக்களிடம் உண்மையை எடுத்து செல்வதை விட்டுவிட்டு அரசுகளை பாதுகாக்கும், இலாபத்தை மட்டும் கருத்தில் கொண்டு இயங்குகிறது. ஊடகங்கள் என்பது ஆக்க சக்திக்கே பயன்படவேண்டுமே தவிர, அழிக்கும் சக்தியாகப் பயன்பட்டு விடக்கூடாது என்பதில் ஊடகங்கள் நடு நிலையுடன் கண்ணும் கருத்துமாகச் செயற்பட வேண்டும். இந்த அடிப்படையில் "இலக்கு" தமிழ் தேசிய சிந்தனைகளை வளர்க்கும் சிந்தனையுடன் தொடர்ந்து இயங்குவது இன்றைய காலத்தின் தேவை.

## 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'

**மருத்துவர் வரதராஜா,**
முன்னாள் பிராந்திய சேவைகள் பணிப்பாளர், முல்லைதீவு.(அமெரிக்கா)

மறத் தமிழ்களாக வாழ்ந்த இனம் எங்கள் தமிழினம். தமிழ் மொழியும், தமிழினமும் தன்னிகரில்லா தாற்பரியம் கொண்டவை. கலை, இலக்கியம், விளையாட்டு, வீரம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், பொருளாதாரம் போன்றவற்றை உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமைக்குரியது எம்மினம். உலகின் மூத்த மொழி எங்கள் தமிழ் மொழி.

ஆனால் இவையெல்லாம் கற்பனையல்ல நியாயமென்று உலகிற்கு மீட்டும் நிரூபித்துக் காட்டியவர் தமிழீழத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள். புறநானூறை புதுப்பித்துக் காட்டியவர். அனால் சூதும், வஞ்சகமும், துரோகமும் சேர்ந்து நடத்திய போரில் நாமெல்லாம் நாதியற்றவர்களாக நாடெங்கிலும் சிதறுண்டு கிடக்கிறோம். இருந்தாலும் எங்கள் கலை, இலக்கியம், விளையாட்டுக்கள், அரசியல் என்பவற்றை நாம் மீண்டும் மீண்டும் எம் இன்றைய சமூகத் திற்கும் நாளைய இளம் சந்ததியினருக்கும் தெரிவிக்க வேண்டிய கடமையை, சரியான நேரத்தில், சரியான விதத்தில் செய்து வருகிறது "இலக்கு வாராந்த மின்னிதழ்"

எம் தாயக மண்ணின் வீர வரலாறும் அதன் வளர்ச்சியும் பசு மரத்தாணியாக இன்றைய தலைமுறையினரிடையே பதிந்திருந்தாலும் எங்கள் இளைய தலைமு றையினரும் எங்கள் வரலாறு பற்றி அறியவேண்டியது இன்றியமை யாததாகும்.அந்த வகையில் ஈழயுத்தம் எதற்காக தொடங்கியது? எவ்வாறு வியாபித்து முள்ளிவாக்கால் வரை சென்றது? என்ற வினாக்கள் நாளைய தலைமுறையினரிடையே எழும் என்பதில் ஐயமில்லை. அதற்கு ஆதாரமாக வரலாற்று நிகழ்வுகளையும் தற்கால நிகழ்வுகளையும், உண்மைச் சம்பவங் களையும், ஆவணப்படுத்த வேண்டியது எமது கடமையும், கட்டாயமுமாகும்.

காலத்தின் தேவை உணர்ந்து, தமிழர் எம் வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் 'இலக்கு வாராந்த மின்னிதழ்' முழு முயற்சியோடு செயலாற்று வதை எண்ணி நாம் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும்.



எங்களுடைய வரலாற்றை பிரதிபலிக்கும் வகையில் ஆவணப் படங்களோ, நூல்களோ இன்னும் பெரியளவில் வெளிவரவில்லை. எனவே வாழும் சாட்சியங்களாக பல ஆயிரம் போராளிகளும், மக்களும் புலத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒன்றிணைத்து எங்கள் வரலாறு களை பதிவு செய்ய வேண்டியதும் அதனை பேணிப் பாதுகாக்க வேண்டியதும் தமிழர் எம் தலையாய கடமையாகும். 'ஆவணங்களே அசைக்க முடியாத வரலாறுகளைப் பொக்கிஷங்கள்' ஆண்ட பரம்பரை எம்மினம் நாம் ஒன்றும் அடிமை களில்லை 'என ஆணித்தரமாக அகிலத்திற்கு மட்டுமல்ல, அடுத்த தலைமுறைக்கும் ஆக்கிரோஷமாக எடுத்துரைக்க நாம் அனைவரும் "இலக்கு வாராந்த மின்னிதழ்" செயற்பாடுகளுக்கு தோள்கொடுப்போம்.

அத்தோடு இந்த இலக்கு வாராந்த மின்னிதழ் தமிழர்களின் அடையாளமாகிய தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் பிறந்ததினத்தன்று ஆரம்பித்து இன்றுடன் ஒரு வருடத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்கிறது. இலக்கு வாராந்த மின்னிதழ் செயற்பாடுகளும், நோக்கங்களும் வெற்றிபெற நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு இதயப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இலக்கு மின்னிதழ் இலங்கை பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான குரலை துணிச்சலுடன் பதிவுசெய்வது பாராட்டுக்குரியது

**சிவா வசந்தன், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், நியூசிலாந்து**



இலக்கு பத்திரிகை கடந்த ஓராண்டு காலமாக தாயகச் செய்திகள், ஆய்வுக் கட்டுரைகள், நேர்காணல் போன்றவற்றை காலம் தவறாது, நடுநிலமை, உண்மை, துணிவு, மற்றும் அர்ப்பணிப்பு போன்ற சிறந்த ஊடகத்துறைத் தார்மீகக் கோட்பாடுகளை கடைப்பிடித்து ஈழத்தமிழருக்காக மின்னியல் வடிவில் பிரசுரித்து வருவது பாராட்டுதலுக்குரியது.

இலக்கு ஈழமக்களின் சுதந்திர வாழ்வா தாரத்திற்கும், சுதந்திர அரசியலுக்குமாக அயராது உழைத்து வரும், விரைந்து வளர்ந்து வரும் ஒரு பத்திரிகையாக பரிணாமித்து நிற்பது போற்றத்தக்கது. இலங்கைத்தீவின் இனவாத அரசியல் நிலைப்பாடுகளையும், ஈழத்தமிழரின் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களையும் அப்பட்டமாக படம்பிடித்து காட்டுவதில் இலக்கு பத்திரிகை இம்மியழவும் பிசகவில்லை.

ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் முற்போக்குச் சக்தியாக இலக்கு தொடர்ந்து பணியாற்ற எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். ஈழத்தமிழரை, மற்றும் உலத்தமிழரை மிகப்பெரும் சக்தியாக ஒன்றிணைத்து சுதந்திர தமிழீழத்தை கட்டியெழுப்ப இலக்கு பத்திரிகையின் பணி வெற்றிகரமாக தொடர எனது வாழ்த்துக்களை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சார்பில் வாரி வழங்குகிறேன்.

## வருட நிறைவுக்கான வாழ்த்துக்கள்

**ராஜி பற்றசன், கனடா**




இலக்கு வாராந்த மின்னிதழ் இன்றோடு ஒரு வருட நிறைவை கொண்டாடுகிறது. இந்த மின்னிதழ் அனைத்துலக தமிழ் ஊடக மையமாக தன்னை அடையாள படுத்தி, தமிழ் மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை கொண்டு வரும் ஒரு ஊடகமாக செயற்படுவது பாராட்டத்தக்கதாகும். குறிப்பாக, தாயக களம் ஊடாக தாயகத்தில் நடை பெறும் களநிலவரங்களை மக்களுக்கு தெரியப்படுத்துவதோடு, புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் கள நிலவரங்களையும் உள்ளடக்குகிறது. இதுவரை தாயக களம் , அறிவாயுதம் மற்றும் தமிழக களம் பகுதிகளோடு இயங்கி வந்த இலக்கு , தற்போது கேள்வி பதில் பக்கத்தை அறிமுக படுத்தி இருப்பது அதன் வளர்ச்சியை காட்டுகிறது. தமிழர்களின் தற்கால சூழ்நிலையில், தமிழர்கள் தமது தாயகத்திக்கான வழிமுறைகள் என்ன, சர்வதேசம் என்ன தீர்வை தமிழருக்கு தர முடியும், புலம் பெயர்ந்த தமிழர்கள் என்ன செய்கிறார்கள் என்கிற வினாக்களுக்கு விடை தேடி கொண்டு இருக்கிறார்கள்.

இந்த பாதையில் பயணிக்கிற எல்லோரையும் இணைக்கிற வகையில், பக்க சார்பின்றி இந்த வினாக்களுக்கு விடைகளை கொண்டு வருகிற ஒரு ஊடகமாக இலக்கு விளங்க எனது வாழ்த்துக்கள். குறிப்பாக, மனித உரிமை ஆர்வலர்களை இனங்கண்டு, அவர்கள் செயற் பாட்டை அதிகம் வெளிக்கொண்டு வந்தால், ஐநாவில் தமிழர் முன்னெடுக்கும் விடயங்களை அதிகம் பேசப்படும் விடயங்களாக மாற்றினால், மக்களுக்குள் ஒரு விழிப்புணர்வை கொண்டு வரும் கருவியாய் இலக்கு பக்க சார்பற்று விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

# இலக்கு மின்னிதழுக்கு புலம்பெயர் சமூகம் வாழ்த்து

## தமிழர்களின் இலக்கு நோக்கிய பயணத்தில் இலக்கு மின்னிதழ் ஒரு ஊன்று சக்தி

**மாத்தளைசோமு, தமிழ் ஓசை ஆசிரியர், அவுஸ்ரேலியா**



இணையதளம் ஊடாக "இலக்கு" என்ற மின்வார இதழ் என் பார்வையில் பட்டபோது அதனை படித்தேன். இலக்கு என்றசொல்லுக்கு அமைய தமிழர் நிலம், தமிழர் மொழி, என்பனவற்றை உள்ளடக்கி ஒரு தேசிய இனத்தின் இலக்கினை வெளிப்படுத்தும் இதழாக வருடம் ஒன்று கடந்தும் தொடர்ச்சியாக வெளிவருவது பாராட்டுக்குரியது.

கைபேசியில் உலகத்தை பார்க்கும் இந்த காலத்தில் மின்னிதழ்கள் தவிர்க்க முடியாது. ஆனால் அந்த மின்னிதழ்கள் ஒரு இலக்குடன் இலக்கு நோக்கிப் பயணம் செய்வது பாராட்டுக்குரியது. தமிழர்கள் புலம்பெயர்ந்து பல்வேறு மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆளுமைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும்போது தமிழரின் தனித்துவத்தை உலகிற்கு முன் வைத்திட இலக்கு முக்கியமாக கருதப்படுகிறது.

இவற்றை கண் முன்காணும் வாசகர்கள் தமது கருத்துக்களை பரிமாறிக்கொண்டு தமிழர்களின் இலக்கை அடைவதற்கு முன்வர வேண்டும். மொழி என்பது ஊடகத்திற்கு உதவினாலும் தாய்மொழி ஒரு அடையாளம் ஆகும்.

அதிலும் தமிழ் மொழி வேறு எந்த நிரந்தர வெளிப்புற அடையாளம் இல்லாது தமிழர்களுக்கு தனித்துவத்தை வெளிப்படுத்திடும் சான்றாக இருப்பது தாய் மொழிமட்டுமே.

தமிழர்கள் நாம் உலகில் எங்கு வாழ்ந்தாலும், மொழியாலும், இனத்தாலும் ஒன்றுபடவேண்டியது காலத்தின் தேவை ஆகும். இலக்கு நோக்கிய பயணத்தில் "இலக்கு" மின்னிதழ் தமிழர்களுக்கு ஒரு ஊன்று சக்தியாக வலம் வரும் என்பதில் ஐயமில்லை.

ஓர் ஆண்டு நிறைவுகாணும் இலக்கு மின்னிதழ் பத்திரிகைக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மனநிறைவு கொள்கின்றேன். தொடரட்டும் இலக்கின் பயணம். மலரட்டும் இலக்கு மின்னிதழ்.

## இலக்கு ஒன்றுதான் விடுதலை

**தமிழமுதன், உரிமையாளர் ஜப்பான் தமிழ் வானொலி**



வணக்கம் உறவுகளே. இலக்கு ஒன்றுதான் விடுதலை. இலக்கு என்ற ஒரு அருமையான தமிழ்மக்களின் உரிமைகளைத் தாங்கி வரும் மின்னிதழை உலகம் முழுவதும் படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன். நான் ஜப்பான் நாட்டில் உள்ள தமிழ் வானொலி ஒன்றின் உரிமையாளராக பணியாற்றி வருகிறேன்.

ஈழத் தமிழர்களின் நிலைப்பாடுகள் குறித்து இந்த மின்னிதழ் மூலமாக அறிய முடிகிறது.

கடந்த வருடம் தமிழகத்தில் துணிவும் துணிச்சலும் என்ற ஒரு விருது எனக்கு வழங்கப்பட்டது. இலக்கு என்பது ஒரு சாதாரண வார்த்தை இல்லை. இலக்கை நோக்கியே ஒவ்வொரு உயிரும் இந்த உலகில் ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்த அடிப்படையில் ஈழத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்கும்நாள் வரை இலக்கு மின்னிதழ் தனது இலத்திரணியப் பாய்ச்சலை நிகழ்த்த வேண்டும் என்பதே எனது விருப்பம்... வாழ்த்துகள்.

## இலக்கு மின்னிதழ் தமிழ்த் தேசிய ஊடக வெளியை நிறைவுசெய்கிறது

**ஸ்ரிவன்,**
**பொறுப்பாளர் ஈழத்தமிழர் மக்களவை, நோர்வே**



இலக்கு — 2009ம் ஆண்டுக்குப் பின்னரான தமிழ்த் தேசிய ஊடக வெளியை நிறைவுசெய்யும் ஒரு பத்திரிகையாக இலக்கு வெளிவருவதை இட்டு நான் புளகாங்கிதம் அடைகின்றேன். நமது தேசியம் சார்ந்த பதிவுகளுடன் தமிழகம், மற்றும் சர்வதேச அரசியல் செய்திகளை ஓரளவேனும் காவிவரும் இலத்திரனியல் பத்திரிகைகளில் இலக்கு ஈழத்தமிழரைப் பொறுத்தவரை ஒரு முகிகியமான இதழ் என்றே கூறவேண்டும். புதிய ஊடகங்களின் வரிசையில் வரும் இவ்விதழானது அழகாக கண்ணைக் கவரக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டு வெளிவருகின்றது.

இப்பத்திரிகையானது போர் நிறைவடைந்த பின்னர் என்னென்ன வகைகளிலெல்லாம் ஆக்கிரமிப்புக்கள், அபகரிப்புக்கள் நடந்திருக்கின்றன? நடந்து கொண்டு இருக்கின்றன? என்பதை ஆய்வுத்தளத்தில் நின்று பதிவுசெய்து வருகின்றது. இப்பத்திரிகை ஊடாக மேலும் பல பத்தியாளர்களை ஊக்கப்படுத்தி உருவாக்கவேண்டும். அதற்கான தளத்தை இம்மின்னிதழ் ஏற்படுத்தவேண்டும்.

பல ஆக்கபூர்வமான ஆய்வுக்கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன. தாயகம், புலம்பெயர்தளம், தமிழகம் எனத் தமிழர் வாழும் நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள், கட்டுரைகளை எழுதுகின்றனர். இதே போன்று ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகளை உணர்ந்த சிங்கள பத்தியாளர்களையும் உள்ளடக்கினால் நன்றாக இருக்கும் என்பது எனது கருத்து. இப்பத்திரிகையைப் படிக்கும் ஒருவர் பத்தாண்டுகளுக்குள் நடந்த விடயங்களை சம்பவங்களாகவும், ஆய்வாகவும் படித்துணர முடியும் என்பது எனது எண்ணம். இன்றைய ஊடகப் பரப்பில் உண்மையை எடுத்தியம்பும் ஊடகங்கள் மிகக் குறைவென்றே கூறலாம். பணத்திற்காகவும் தமது வியாபார நோக்கிற்காகவும் அதிகார மையங்களிடம் விலை போகும் நேர்மையற்ற ஊடகங்களின் மத்தியில் இலக்குப் போன்ற மின்னிதழ்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் எம்மத்தியில் செயற்படுவது வரவேற்கத்தக்கது.

வேகமாக வரலாற்றை மறந்துவரும் உலகின் தொன்ம இனத்தினராகிய நாம் இதுபோன்ற இதழ்களை வாசித்து எமக்கு நடந்த இனப்படுகொலை வரலாற்றை அடுத்த சந்ததிக்கும் கடத்தவேண்டும்.

தமது பொன்னான நேரத்தைச் செலவிட்டு இப்படியான இலவச மின்னிதழை மக்கள் மத்தியில் கொண்டு வந்து சேர்க்கும் இலக்கு ஆசிரியர் குழுவிற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள் உரித்தாகட்டும். இலக்கு ஒரு பலமான நிறுவனமயப்படுத்தப்பட்டு இளையோருளுக்கும் வேற்று இனத்தவருக்கும் எமது நியாயமான விடுதலைப் போராட்டத்தைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பது எனது பேரவா. இப்பத்திரிகை மின்னிதழாக மட்டும் நின்றுவிடாமல் அச்சுப்பிரதியாகவும் வருவதற்கான ஆவன செய்யவேண்டும் என இலக்குக் குழுமத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இலக்கு தொடங்கப்பட்ட நோக்கத்தின் இலக்கை அடைய எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

## இலக்கு மின்னிதழ் உலகத் தமிழர்களை இணைக்கும் ஓர் உறவு பாலம்

**பொருளாதார ஆய்வாளர் பாலகிருஷ்ணன், இலண்டன்**



இலக்கு வாராந்த மின்னிதழ் 52 வது வாரத்தை கடந்து ஒரு வயதை நிறைவு செய்து வரும் இலக்கு மின்னிதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமையடைகிறேன். ஏனெனில் செய்தி பத்திரிகை என்பதையும் தாண்டி உலகத் தமிழர்களை இணைக்கும் ஓர் உறவு பாலமாய் இலக்கு மின்னிதழ் மிகவும் நேர்த்தியாக தன் பணியினை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது.

மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதற்கு அமைவாக தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் என்ற பெயரில் வெளிவரும் நிபுணர் குழு அறிக்கை உண்மை நிலவரத்தினை வலுவாக எடுத்துரைக்கிறது. மேலும் தாயக மண்ணில் சிங்களப் பேரினவாத அரசால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைப்பு ரீதியான இன அழிப்புகளையும், மக்களின் அவலங்களையும், தமிழ் மக்களை சரியாக வழிநடத்த தவறும் தமிழ் தலைமைகளின் உண்மை முகத்தினையும் எந்தவொரு அதிகார வர்க்கத்துக்கும் அடிபணியாது ஆதாரப் பூர்வமாக பதிவு செய்து வருவது சிறப்பு அம்சமாகும். அரசியல் தலைமைகளில் மட்டும் தங்கியிருக்காமல், சிவில் தலைமைகளையும் அடையாளம் கண்டு அவர்களையும் நேர்காணல் செய்து உலக அரங்கில் கொண்டு சென்றதில் இலக்கிற்கு தனி இடம் உண்டு உண்மையுடனும், நேர்மையுடனும், ஆதாரத்துடன் உலகத் தமிழர்கள் அனைவருக்கும் வாராந்தம் இதனூடாக சிறிய பங்கை வழங்கி பொறுப்புடன் நடந்து தனது இலக்கை அடைந்து உள்ளது.

அத்துடன் மலையக தமிழ் பிரதேச செய்திகள் மற்றும் தமிழகச் செய்திகள் புலம்பெயர் தமிழர் தரப்பு செய்திகள் ஊடாக உலக நாடுகளை உள்ளடக்கிய முக்கிய அரசியல் பொருளாதார கட்டுரைகள் செய்திகளை இவ்விதழ் இலக்கு தவறாமல் உடனுக்குடன் செய்தியாக தாங்கி வருகிறது. உலகத்தில் வாழும் ஈழத் தமிழர்களை இணைக்கும் பாலமாக தொடர்ந்து செயல்பட்டு ஈழத்தமிழர்கள் இலட்சிய விடுதலை அடைய வரை செயல்பட வாழ்த்துகிறேன்.

# இலக்கு மின்னிதழுக்கு புலம்பெயர் சமூகம் வாழ்த்து

## சமூக அரசியற் பயணத்தில் இலக்கு மின்னிதழ் தனித்துவமான பங்கை வழங்கி வருகிறது



இலக்கு தனது முதலாவது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்வதையிட்டு ஊடகவியலுடன் இணைந்தவன் என்ற வகையில் மகிழ்ச்சி அடைகிறேன். ஓர் ஊடகத்தை ஒரு வருடம் நடத்துவது பெரும் யாகமாகும். தமிழ் மக்களின் அரசியற் போராட்டம் அகிம்சை வழியில் சத்தியாக்கிரகமாக ஆரம்பித்த வேளையில் பிராந்தியப் பத்திரிகையாகத் தொடங்கி தமிழ்த்தேசிய வரலாற்றுடன் இணைந்த ஈழநாடு மீண்டும் யாழ் நகரில் வருகின்றது என்ற செய்தி அண்மையில் வந்துள்ள வேளையில் இலக்கு தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறது.

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் இதழூடகங்களின் வகிபாகத்தை குறிப்பிடுவதற்காகவே அன்று வெளியான ஈழநாட்டை இங்கு நினைவூட்டவேண்டியேற்பட்டது.

**வரதராஜன், நியூசிலாந்து**
**சக்தி தொலைக்காட்சியின் முன்னாள் செய்திப் பிரிவு பணிப்பாளர்**

இடை வேளைகளைத் தாண்டி மீண்டும் தொடங்கிய ஈழநாடும் அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை நோக்கியே பயணிக்கும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பு எனப்பட்டது. இலக்கு கடந்த பன்னிரு மாதங்களில் தமிழ் மக்களின் சமூக அரசியற் பயணத்தில் தமிழரசியலில் விமர்சன ஊடகவியலில் தனித்துவமான பங்கை வழங்கியுள்ளது எனில் மிகையல்ல.

பன்முகப்பட்ட பல்பரிணாம பல் சுவைப் பணிகளை தனது பக்கங்களுள் இயன்றளவு அடக்கி நல்லதோர் ஊடகப் பணியை ஆவணப் பணியாகச் செய்துள்ளது. தனிப்பட்ட ரீதியான தாக்குதல்களை தவிர்த்து, எமது மக்களுக்கு வழிகாட்டியாக இருப்பவர்கள் தங்களையும், தங்களது அரசியற் பாதையையும் நாடி பிடித்துப் பார்க்கும் காட்டியாக அது இன்னும் திகழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அரசியல் விடுதலைக்கு அடிப்படையான சமூக விடுதலை சார் ஆக்கங்கள், மொழி பெயர்ப்புகள் போன்றனவற்றை மேலும் இணைப்பதன் மூலம், எமது அரசியற் பாதை மீதான, எமது சமூக அறங்கள் மீதான சுய விமர்சனத்தை எம்மீது செலுத்தி, சுயசிந்தனையுள்ள, ஒற்றுமை மிகு இளைய தலைமுறையை உருவாக்கும் பணியை மேற்கொள்ள வேண்டுமென வாழ்த்துகிறேன். 'அடாவடித் தனங்களற்ற' விமர்சனங்கள், கருத்தாடல்களுடன், சுதந்திரமான, சுய விமர்சனங்களை ஏற்கின்ற சனநாயகப் பண்புள்ள ஒரு சமூக அமுக்கக் குழுவை அனைத்துலக ரீதியாகவும், தாயகத்திலும், ஏற்படுத்துவதன் மூலம், தாயகத்திலும் புலத்திலும் இணைதலும், புரிதலும் மிகுந்த ஒரு தலைமைத்துவக் கட்டமைப்பை' இலக்கு' உருவாக்குவதே அதன் இன்றைய நாளின் சிறப்பான சிந்தனையாக வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

இணைய ஊடகமாக மட்டுமன்றி, காணொளி ஊடகமாகவும் அது பரிமாணம் பெற மனமார்ந்த வாழ்த்துகள்.

## இலக்கு மின்னிதழ் ஏனைய ஊடகங்களுக்கு முன்மாதிரியாக விளங்கி வருகிறது

**நிஷா, மக்கள் தொடர்பாளர், தமிழர் இயக்கம்**

இலக்கு மின்னிதழ் வடி வெடுத்து ஓராண்டு நிறைவான இத்தருணத்தில் தமிழீழ இலக்கெய்தி சர்வதேச அரங்கில் போராட்டம் நடத்தி வரும் தமிழர் இயக்கம் சார்பாக பத்திரிக்கையின் நிர்வாகத்தினருக்கு எமது அன்பான வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்!



இலக்கு என்ற பெயருக்கமைய இப்பத்திரிக்கை தமிழினத்தின் விடுதலையை இலக்கு வைத்து போராடும் பல சமூக செயற்பாட்டாளர்களை இனம் கண்டு அவர்களை மென்மேலும் வலுப்படுத்தும் முகமாக அவர்களது உள்ளத்து ஆதங்கங்களை வெளிப்படுத்த இப்பத்திரிக்கை உதவி நிற்கிறது!

சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் அரங்கிலே எம்மைப்போன்ற அரசியற் செயற்பாட்டாளர்கள் மழுங்கடிக்கப்பட்டு எமது சேவைகளும், வேலைகளும் எதிரிகளினால் நிர்மூலமாக்கப்பட்டு வருகின்ற தந்திரோபாய நடவடிக்கைகளை முறியடிக்க இலக்கு போன்ற பத்திரிக்கைகள் ஏனைய ஊடகங்களுக்கு முன்மாதிரியாக விளங்கி வருவது வரவேற்கத்தக்கது! இவ்வாறு ஐ.நா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற சர்வதேச அரங்கங்களிலே நாம் முனைப் போடு செய்து வருகின்ற செயற்பாடுகளை உடனுக்குடன் உலகமெங்கும் பரவி வாழும் தமிழருக்கு எடுத்துரைக்கவும், சிங்கள இனவாத செயற் பாட்டாளர்களை தடுத் துரைக்கவும் உங்கள் பணி அமைய வேண்டுகின்றோம்! உலக அரங்கிலே இலக்கு இன்னுமின்னும் வளர்ச்சி பெற வாழ்த்துகின்றோம். எத்தடை வந்தாலும் வைத்த இலக்கிலிருந்து இன்னளவேனும் தப்பாது, ஊடக இலக்கணம் தவறாது இந்த இலக்கு இருக்க வாழ்த்துகிறோம். எமது போராட்டத்தை அடுத்த சந்ததியினருக்கும், அடுத்த இனத்தவருக்கும் கொண்டு செல்லும் காலப்பிரமாண மற்றும் சமகால அரசியல் பிரமாணங்களை ஊடறுக்கும் சக்தி ஊடகத்திற்குரியதே! அதை இலக்கு வைத்தே செய்து வருவது எமக்கு நம்பிக்கை அளிக்கிறது.

## இலக்கின் வெற்றிக்கு இனிய வாழ்த்துகள்

**எழுத்தாளர் ஆதிலட்சுமி சிவகுமார், சுவிஸ்**



கடந்த ஆண்டு முதல் இணையப் பரப்பில் இலக்கு என்கின்ற மின்னிதழ் வெளிவந்து கொண்டிருப்பதை அறியமுடிகிறது. இவ்விதழ் உலகத் தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசிய உணர்வை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருப்பதாக வெளியீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசியல், கலை, அறிவியல் மற்றும் சமூகம் தொடர்பான படைப்புகளை தாங்கி தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் இலக்கு, அதன் முதலாம் ஆண்டு நிறைவில் சிறப்பிதழாக மாவீரர் மாதத்தில் வெளிவருகின்றது.

ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் தொன்மங்களையும், ஆவணங்களையும் திட்டமிட்டு அழிப்பதன்மூலம், இலங்கைத் தீவில் தமிழினத்தின் வரலாற்று உரிமைகளை மறுத்துவரும் சிங்களப் பேரினவாத சக்திகள் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, முகநூல் மற்றும் யூரியுப் போன்றவற்றில் தமிழர்களின் போராட்ட வரலாற்று ஆவணங்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகின்றன.

இந்நிலையில் புலம்பெயர்ந்து உலகமெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழ் படைப்பாளர்களாகிய நாம் எமது வரலாற்றையும் வாழ்வியற் சுவடுகளையும் பாதுகாத்து எமது அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்கவேண்டிய கடப்பாடுடையவர்களாக உள்ளோம். இலக்கின் பணி தொடர வாழ்த்துகிறேன்.

## இலக்கு மின்னிதழுக்கு வாழ்த்துகள்

**அக்கினிப் பறவைகள் அமைப்பு**

சமூக விழுமியங்களைப் பேணுதல், சமூகத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துதல், காலத்தைச் சரியாகப்பதிவு செய்தல் எனப் பல்வேறு பொறுப்புகளைச் சுமந்து நிற்கும் துறைகளுள் ஊடகத்துறை முதன்மை யானது. அந்தவகையில் தமிழ்த் தேசிய இலட்சியங்களைச் சுமந்து தனது பயணத்தில் முதலாம் ஆண்டு நிறை வினைக்காணும் "இலக்கு" மின்னிதழுக்கு எமது அமைப்பின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அக்கினிப் பறவைகள்

அத்தோடு "இலக்கு" இதழ் தனது ஊடகச் செயற் பாடுகளை மேலும் விரிவுபடுத்தி, ஊடக தர்மத்தின் ஓர் அங்கமான வேறு நிகழ்ச்சி நிரல்களுக்குள் செல்லாமையைக் கடைப் பிடித்துத் தனக்கேயான நேர்மைத் தன்மையுடன் பயணிக்கும் என்றும் நம்புகிறோம்.

# மீண்டும் வருவாயா...

கண்களில் சொரிந்திடும் கார்த்திகை மழை
கல்லறைத் தெய்வங்கள் தோன்றிடும் வரை
கட்டியணைத்திடும் உறவுகள் இங்கே,
கண்ணே மணியே என் முத்தே நீ எங்கே?

வருவீர்கள் நீங்கள் வருவீர்களென்று
விழியோரம் வழிகின்ற விழிநீரைவென்று
வழிதோறும் விதைத்திட்ட கல்லறைகண்டு
வணங்கியே நிமிர்கின்றோம் மாவீரரே!

வீரமாய் நிமிர்ந்த தோள்களை மீண்டும்
வெற்றிகள் சூடிடத்தேடுகின்றோம்
விடுதலை தீபத்தை ஏற்றிவைத்த
உத்தமர் நினைவிலே வாடுகின்றோம்
தேசம்காத்த பிள்ளைகள் கனவினை
கண்களில் சுமந்தே தேடுகின்றோம்
காக்க நினைத்திட்ட தேசத்தையெண்ணி
நாளும் நினைவினில் வாடுகிறோம்
எங்கே போயினர் எம்பிள்ளைகள் என்று
தேடிடும் உறவுகள் தினம் தினமிங்கு...
வருவாயா என்மகனே! மீண்டும்
வருவாயா என் மகளே!

தூரமாய்ப்போனதோ இலட்சியமென்று ஏக்கத்தைச்
சொல்லிட மொழிகளில்லை...
தூங்கிக்கிடக்கின்ற உலகின் மொழிகளில்
துயரதைப் போக்கிடும் வழிகளில்லை...
பாரெல்லாம் பரந்து விரிந்து கிடக்கிறோம்
பார்த்தும் பாராமல் பிரிந்து நடக்கிறோம்
பிரிவினை போற்றும் பாரச்சுமைகளால் தெருவினில்
நின்றே தேம்புகிறோம்..
ஆர்க்கும் அஞ்சா வல்லமை தேடி உம் வாசலில்
நின்றே வேண்டுகின்றோம்..
சூரியத்தேவனின் பிள்ளைகளே தூரவிலகாமல்
வாருங்களே!

அள்ளி அணைத்திட்ட அப்பாவும்,
உதிரத்தால் அமுதினை ஊட்டிய அம்மாவும்
அழுது அழுது கிடக்குறோம்,
ஒவ்வோர் பொழுதுகள்தோறும் உம்மை நினைக்கிறோம்...
கொள்ளிவைக்கவே இங்கோர் பிள்ளையில்லையெனக்
குமுறவில்லை மக்காள், நீங்கள் அள்ளியெடுக்க
நினைந்திட்ட விடுதலை தேசத்தைக் காண்கின்ற
நாள்தனில்,
ஏற்றிய கொடியினில் உம் முகம் காணவே ஏங்குகிறோம்...


மலர்வாயா என் மகளே, மீண்டும் வருவாயா என் மகனே!




காந்தள்

## இலக்கு மின்னிதழோடு உறவாடும் புலம்பெயர் தமிழர்கள்





## இலக்கு மின்னிதழை நெஞ்சார வாழ்த்துகிறோம்

**செல்வராசா செல்வகுமார்**

கடந்த எட்டு மாதங்களாக இலக்கு மின்னிதழை நான் தவறாது வாசித்து வருகிறேன். இந்த இதழானது செய்தி ஊடகம் என்பதைக் கடந்து, திக்குத் தெரியாமல் தடுமாறி வரும் எமது தமிழ் இனத்திற்கு சிறந்த, காத்திரமான, நம்பிக்கை தரக்கூடிய படைப்புகளை எமக்கு தாங்கி வருவது மன நிம்மதியைத் தருகிறது. இத்தருணத்தில் இலக்கு மின்னிதழ் ஒரு வருடத்தை நிறைவு செய்திருப்பதை முன்னிட்டு எமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.



# இலக்கு மின்னிதழுக்கு தமிழகத்தின் தலைவர்கள் வாழ்த்து

## இலக்கு - மீண்டெழும் சகாப்தத்தில் ஒரு மைல்கல்

**ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ.மணி வாழ்த்தறிக்கை**



முள்ளிவாய்க்கால் பேரழிவு என்பது ஒன்றரை இலட்சம் தமிழ் மக்கள் சாகடிக்கப்பட்டது மட்டுமின்றி அதன் பரிமாணம் என்பது தமிழ்நாட்டு தமிழர்களால் கற்பனை செய்துபார்க்க முடியாதது. ஒரு கைத்துப்பாகியுடன் தொடங்கிய போராட்டம் முப்படையாக வளர்ந்து கல்லூரி, வங்கி, காவல்துறை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஊடகம் என ஓர் அரசுக்கு உரிய கட்டுமானங்கள் கொண்டதாக மக்களால் வளர்த்தெடுக்கப் பட்டது. ஈகத்திலும், ஆக்கத்திறனிலும் ஆகச் சிறந்த சமூக முன்னோடிகளால் இந்த ஆக்கங்கள் உருவாக்கப்பட்டன.

ஆனால், இறுதி யுத்தம் மனிதப் படுகொலைகளோடு விடுதலைக்கான கட்டுமானங்களை நொறுக்கி முப்பதாண்டுகள் பின்னுக்கு தள்ளியது. முள்ளிவாய்க்கால் முடிவல்ல என்று உலகுக்கு சொல்லும் வகையில் ஓரிரண்டு ஆண்டுகளிலேயே மக்கள் மெல்ல எழத் தொடங்கினர். ஆயினும் விடுதலைக் கட்டுமானங்களை மீளக் கட்டமைப்பதற்கு இன்னும் காலம் பிடித்தது. இழந்த கட்டுமானங்களில் மிக முக்கியமானது ஈழத்தையும், அதன் ஆதரவுத் தளமாக இருக்கும் தமிழ்நாட்டையும் புலம்பெயர் தேசங்களையும் இணைப்பதற்குரிய நம்பகமான ஊடகமாகும். தொடர்புகள் அறுந்துவிட்ட நிலையில் உடலின் இரத்த நாளங்களாக மக்களை இணைக்க வேண்டும். செய்தியில் உண்மைத் தன்மை, தொடர்ச்சி, விடுதலைக்கான திசையில் மக்களுடைய சிந்தனையை ஒழுங்கமைத்து உந்துவது ஆகியவை இருந்தாக வேண்டும். இந்தக் கூறுகளோடு 52 வாரங்களாக 'இலக்கு' மின்னிதழ் மலர்ந்துள்ளது என்பது ஆற்றுப்படுத்தும் ஒன்று மட்டுமல்ல, விடுதலைக் களத்தில் இருக்கும் எல்லோருக்கும் ஊக்கமளிக்கக் கூடிய ஒன்றாகும்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னான சகாப்தத்தில் இலக்கின் தொடக்கமும், பயணமும் ஒரு செய்தியை சொல்கிறது. அது அழிக்கப்பட்ட கடுமானங்கள் மீளக் கட்டியெழுப்பப்படும் என்பதாகும். அதில் ஒன்றாய் 'இலக்கு' மிளிரும். இலக்கு ஊடக அணிக்கு எமது பாராட்டுக்கள். 'இலக்கு' மின்னிதழ் தனது இலக்கு நோக்கியப் பயணத்தைத் தொடர வாழ்த்துகிறேன்.

## தமிழீழ விடுதலை என்ற இலக்கை எட்டும் வரை இலக்கின் பயணம் தொடரட்டும்

**தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் வாழ்த்தறிக்கை**



தமிழீழ மக்களின் அவலங்களை தாங்கி இலக்கு மின்னிதழ் கடந்த ஓராண்டு காலமாக இடைவிடாது வெளிவந்தமைக்கு எமது கட்சியின் சார்பில் வாழ்த்துக்களை தெருவித்துக் கொள்கின்றேன்.

தமிழீழ மண்ணில் நடக்கும் அரசியல் போராட்டங்கள், இலங்கை அதிகார வர்க்கத்தால் அங்குள்ள எமது உறவுகள் எதிர்கொண்ட ஆபத்துக்கள், நெருக்கடிகள், அரசியல் கட்சிகள் மேற்கொள்ளும் நிலைப்பாடுகள், சிங்கள அரசின் பேரினவாத முன்னெடுப்புகள் ஆகியவற்றை வாரந்தோறும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாய் ஒவ்வொரு ஞாயிறன்றும் எமது கைப்பேசியில் மின்னும் மின்னிதழாக இலக்கு காலத்தின் தேவையை நிறைசெய்து வருகிறது. முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின்னான இந்த பத்தாண்டுகளில் இலக்கு மின்னிதழின் தொடக்கமும், அதன் தொடர்ச்சியும் குறிப்பிடத்தக்க ஒரு முன்னெடுப்பாகும். தமிழீழத்தையும், புலம்பெயர் தமிழர்களையும், தமிழ்நாட்டையும் இணைப்பதில் தகவல் பரிமாற்றம் மிகவும் முக்கியமானது.

அந்தப் பணியை இலக்கு மின்னிதழ் செவ்வனே செய்து வருகிறது. இலக்கு மின்னிதழுக்காகப் பாடுபட்டுவரும் நிர்வாகிகள், தலைமை ஆசிரியர் செய்தி சேகரிப்பாளர்கள், கட்டுரையாளர்கள், வடிவமைப்பாளர்கள், ஒப்புநோக்குனர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் உரித்தாக்குகிறேன்

## ஈழத்தின் வலிகளை துணிச்சலோடு வெளிப்படுத்தும் காலக்கண்ணாடி இலக்கு மின்னிதழ்

**வி.மைத்ரேயன்,**
**அ.தி.மு.க முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர்**



ஈழத்தில் முன்னெடுக் கப்பட்ட இனவிடுதலைப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் மாபெரும் இன அழிப்புடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அந்த அவலம் நிறைவடைந்து இன்றைக்கு பத்து ஆண்டுகளாகின்றன. ஆனால் தற்போது வரையில் அங்கு நிகழ்ந்த இன அழிப்புக்கு நீதி கிடைக்கவில்லை. இழைக்கப்பட்ட அவலங்களுக்கான நீதி கிடைப்பதற்கு பல்வேறு போராட்டங்களும், குரல்களும் தொடர்ச்சியாக எழுப்பட்டு வருகின்றன. அவை தொடர்ச்சியாக உயிர்ப்புடன் இருக்க வேண்டும். முன்னதாக, தமிழர்கள் படுகொலை குறித்து மாநிலங்களவை பரிசீலிக்கவோ, இரங்கல் தெரிவிக்கவோ இல்லை. ஆகவே எனக்கு ஏதேனும் நிகழ்ந்தால் கூட மாநிலங்களவையில் எனக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றக் கூடாது என்று இறுதி உரையில் கூறி—யிருந்தேன். குறிப்பாக ஏறத்தாழ 14 ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராக பணிபுரிந்த நான் இந்த விடயத்தினை திடமாக கூறி வைத்துள்ளேன். ஈழ உறவுகளின் நீதிகோரியும் அந்த மக்களின் அவலங்களையும் இலக்கு மின்னிதழ் வாயிலாக தொடர்ச்சியாக அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்.

மிக முக்கியமாக ஈழத்தில் வரலாற்றுப் பெருமை மிக்க கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள கன்னியா பிரதேசத்தில் சிங்கள, பௌத்தவாதிகள் கைப்பற்ற விளைந்தமையும், அதற்கு எதிராக குரல்கொடுத்த அகத்தியார் அடிகளாரை சுடுதண்ணீர் ஊற்றி தாக்கியமையையும் இலக்கு மின்னிதழ் தாங்கி வந்திருந்தது. அந்த தகவல் என்னை கனதியாக பாதித்தும் இருந்தது. இவ்வாறான நிலைமைகள் தொடர்ச்சியாக நீடிக்கக்கூடாது. தமிழகமும், இந்தியாவும் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். இந்த வகையில் ஈழத்துச் செய்திகளை என் கண்முன்னே கொண்டு வரும் இலக்கு மின்னிதழை மனதார வாழ்த்துகிறேன்.

## தமிழ் சமூகத்தை தட்டி எழுப்பும் ஆயுதத் தளமாக இலக்கு மின்னிதழ்

**அனைத்து தமிழ்நாடு மாணவர் சங்கம் சென்னை பல்கலைக்கழகக் கிளை**

அ.த.மா.ச
ATSA
ALL TAMILNADU STUDENT ASSOCIATION

தமிழ் சமூகத்தின் அரசியல் மற்றும் தமிழீழ தேசிய விடுதலையின் போராட்டத்தில் அறிவுசார் தளம் என்பது இன்றியமையாத பங்கினை ஆற்றி வருகிறது அறிவுசார் தளத்தில் முக்கிய கூறுகளாக பத்திரிக்கைகளும், ஊடகங்களும் இருக்கிறது.

குறிப்பாக கடந்த 2018 நவம்பர் திங்கள் 26 ஆம் நாள் தமிழீழ தேசிய தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் பிறந்த தினத்தில் ஆரம்பிக்கப்பட்ட "இலக்கு" என்னும் மின்னிதழ் தமிழீழ தேசிய அரசியலையும், தமிழர் நலன் சார்ந்த உரிமைகளையும், தமிழ்நாட்டு செய்திகளையும், உலகத்தமிழ் சமூகத்திடம் தொடர்ச்சியாக கொண்டு செல்லும் பணியினையும், தமிழீழ தேசிய விடுதலை உணர்வை தமிழ் சமூகத்திடம் உயிர்ப்புடன் வைத்திருக்க மாபெரும் இன்றியமையாத பணியினையும் செய்கிறது. தமிழ் சமூகத்தின் நலனில் எந்த ஒரு அரசியல் சமரசமின்றி கருத்துக்களை முன்வைப்பதில் மிக முக்கிய பங்காற்றியும், இன்றைய இளம் தமிழ் சமூகத்திடம் வாசித்தலின் அளவு என்பது குறைந்து கொண்டே வரும் சூழ்நிலையில் தமிழீழ அரசியல் சார்ந்த செய்திகளை எளிமையான வகையில் மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பதில் இப்பத்திரிகை முதன்மை வகிக்கிறது.

விடுதலை வேட்கை உணர்வில் சற்று ஓய்வில் இருக்கும் தமிழ் சமூகத்தை தட்டி எழுப்பும் ஆயுத தளமாக இப்பத்திரிகை அமைய, முதலாம் ஆண்டை நிறைவு செய்து இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் "இலக்கு" மின்னதழுக்கு வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# இலக்கு மின்னிதழுக்கு தமிழகத்தின் தலைவர்கள் வாழ்த்து

## இலக்கு மின்னிதழ் ஈழத் தமிழர்களின் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியம்!

**விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அறிக்கை!**



ஈழத் தமிழினம் தன்னாட்சியுடன் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான அனைத்து வகையான கட்டமைப்புக்களையும் தமிழீழ விடுலைப்புலிகள் உருவாக்கி மிகவும் சிறப்பாக, வெற்றிகரமாகச் செயல்படுத்தி வந்தனர். குறிப்பாக தொலைக்காட்சி, வானொலி, வார இதழ்கள், மாத இதழ்கள் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களை அப்போதே உருவாக்கியிருந்தனர்.

அத்துடன், 2002—சமாதான காலத்தில் நான் ஈழத்திற்குச் சென்றிருந்த போது கிளிநொச்சி அறிவியல் நகரில் “ஊடக அறிவியல் கல்லூரியை” நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் நான் பங்கேற்றேன் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் விடுதலைப் போராட்டத்தின் ஊடாக புலம்பெயர் சமூகத்தின் வலுவான நம்பிக்கையைப் பெற்றிருந்தனர். அதேவேளையில், வலுவான ஊடக கட்டமைப்பொன்றின் ஊடாகவே தமிழீழத்தின்’ அவலங்களையும,; அரசியல் நிலைப்பாட்டினையும் உலகத் தமிழர்களிடமும், சர்வதேச நாடுகளிடமும் கொண்டுபோய் சேர்க்க முடியும் என்ற திடமான நம்பிக்கையையும் கொண்டிருந்தார்கள்.

அந்த பின்னணியில் தான் அவர்கள் பல்வேறு மின்னணு, அச்சு ஊடகங்களை கட்டமைத்ததோடு அதற்கான ஆளணியை உருவாக்கும் தொலைநோக்கோடு ஊடகக் கல்லூரியையும் நிறுவுவதற்கான செயற்பாடுகளை வெகுவாக முன்னெடுத் திருந்தார்கள். ஆனால், சிங்கள பேரின வாதத்தின் சூழ்ச்சியால் அவர்களின் போராட்டமும் அதனைத் தாங்கி நின்ற எண்ணக்கருக்களும் சிதைக்கப்பட்டு விட்டன.

எனினும், தற்போது வரையில் ஈழத்தமிழினம் தனது விடுதலையை எட்டாத நிலையில், ஒரு புறம் இன அழிப்புக்கு நீதிகோரி போராடிக்கொண்டே, இன்னொருபுறம் சிங்கள தேசத்தின் கட்டமைப்பு ரீதியான இனஅழிப்பையும் சந்திக்கவேணடடிய அவலம். இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தவாறு நம்மினம் நாள்தோறும் இருள் சூழ்ந்ததொரு வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனனர்.

இந்நிலையில், ஈழத்தில் சிங்களப் பேரினவாத அரசு மேற்கொள்ளும் தமிழினத்துக் கெதிரான ஒடுக்கு முறைகளையும் அதனால் நமது உறவுகள் எதிர்கொள்ளும் துன்பங்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதில் இன்று மிகவும் பாரிய பணியொன்றை ‘இலக்கு மின்னிதழ்’ மேற்கொண்டு வருவது மிகவும் பாராட்டுக்குரியது. வெற்றிகரமாக ஓராண்டைக் கடந்துள்ள இம்மின்னிதழ் மேலும் வெற்றிகரமாக தொடர்ந்து செயலாற்ற வேண்டுமென விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வாழ்த்துகிறேன்.

## போராளிக்கு நிகராக இலக்கு மின்னிதழ் பணியாற்றி வருகிறது

**நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் பெருமிதம்**



இலக்கு ஒன்று தான் இனத்தின் விடுதலை என்ற புனிதக் கனவோடு பிறந்தததுதான் இலக்கு மின்னிதழ். இந்த மின்னிதழ், ஊடக விழுமியங் களுக்கு உட்பட்டு ஓராண்டு காலம் தன்பணியை சிறப்புறச் செய்து அடுத்தாண்டு அடியெடுத்து வைப்பதையிட்டு நாம் தமிழர் கட்சியின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இலக்கு மின்னிதழானது தமிழ்த் தேசியத்தை பாதுகாப்பதோடு தமிழர்களின் சமூக, கலாச்சார, கலை, இலக்கிய, பண்பாட்டு விழுமியங்களை பாதுகாத்தல் போன்ற பன்முக இலக்கோடு ஒரு களத்திலே போராடும் போராளிக்கு நிகராக இந்த இதழ் தமிழ்த் தேசிய ஊடக பரப்பிலே மிகப்பெரிய பணியை செய்துவருவது போற்றுதலுக்குரியது. ஒவ்வொரு வாரமும் நான் தவறாது இலக்கு மின்னிதழை வாசிக்கிறேன். ஈழத்திலே எமது சொந்தங்கள் படும் துயரங்களை படிக்கும்போது ஒவ்வொரு எழுத்திலும் நான் கரைந்து போகிறேன். அது தாங்கிவரும் அனைத்து தகவல்களையும் நான் வாங்கிக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழ்ச் சமூகத்தின் இளம் தலைமுறை பிள்ளைகளுக்கு தமிழ் தேசிய உணர்வையும், மொழி இனப்பற்றையும், விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தையும் உணர்த்தி வருகிறது.

மேலும் முள்ளிவாக்காலுக்கு பின்னர் தமிழர் தேசத்தின் அரசியல் நிலவரங்களையும், சிங்கள அதிகார வர்க்கம் மேற்கொள்ளும் அனைத்து அடக்குமுறைகளையும், எமது உறவுகள் படும் துயரங்களையும், வார்த்தைகளால் வடிக்க முடியாத பெரும் வலிகளையும், உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழர்களிடத்தில் கைகளிலே சேர்க்கிறது. இது காலத்தின் மிகப் பெரிய பணியாக நான் பார்க்கிறேன். மின்னிதழுக்காக உழைக்கும் அனைத்து ஆளுமைகளுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதோடு, இலக்கு மின்னிதழ் மேலும் வளர்ந்து தமிழ் இனத்தின் உரிமைக்காக குரல் கொடுக்கவேண்டும் என்று அன்போடு வேண்டுவதோடு, நிறைந்த அன்பு கொண்டு நெஞ்சார வாழ்த்துகிறேன்.

## இலக்கு மின்னிதழ் உலகமெங்கும் தனது மின்னிதழ் பயணத்தை தொடரவேண்டும்

**மக்கள் அரசுக் கட்சியின் தலைவர் இயக்குனர் கௌதமன்**



இலக்கு வாராந்த மின்னிதழ் ஐம்பத்தி இரண்டு இதழ்களைக் கடந்து ஓராண்டு நிறைவு பெற்று தனது இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் இலக்கு மின்னிதழ் தொடர்ந்து தமிழினத்தின் இலக்கை வெல்லும் வரை தனது பணியை சிறப்பாக செய்ய வேண்டும் என்று மக்கள் அரசு கட்சியின் சார்பில் மனதார வாழ்த்துகிறேன். ஐம்பதாயிரம் வரலாறு கொண்ட எம் தமிழ் இனத்தின் இளைய தலைமுறைக்கு தகவல்களை வழங்குவதில் ஒரு கலங்கரை விளக்கமாக இலக்கு இணையவானில் பிரகாசிப்பதை ஒரு அறன்மிக்க தமிழனாக மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

இணையத்தின் துணைகொண்டு தமிழ் இனத்திலுள்ள மானமுள்ள தமிழர்களின் அலைபேசி திரைகளில் ஊடுருவி ஆழமான தமிழ் தேசிய கருத்துக்களையும், சிறப்பான வடிவமைப்போடு வலம் வருவதை பார்த்து நான் வியந்திருப்பதோடு ஈழத்தமிழர் குறித்த விவரங்களையும் வாராந்தம் அறிவதற்கு இலக்கு மின்னிதழ வழிகாட்டியாக அமைகிறது.

இலக்கில்லாமல் இவ்வுலகத்தில் எந்த ஒரு பயணமும் வெற்றி பெறுவது இல்லை. ஈழத்தமிழர்களின் இலட்சிய விடுதலைக்காக இலக்கு மின்னிதழ் ஈழத்தின் கள நிலைமைகளை குறிப் பாக தமிழகத்திற்கும், புலம் பெயர் தேசங்களுக்கும் நேர்த்தியாக எடுத்துச் செல்வது வரவேற்கத்தக்கது. பூமிப்பந்தில் தொல்குடிச் சமூகமாகிய தமிழ்ச் சமூகம் தனக்கென்று ஒரு தேசத்தைக் கட்டமைக்காமல் அதிகார வர்க்கங்களின் பிடிக்குள் சிக்குண்டு சின்னாபின்னமாகியுள்ளது. இதிலிருந்து மீண்டு வருவதற்கு, தமிழர்களை சரியாக வழிநடத்துவதற்கு அரசியல் புரிதலோடும், சமூகப் பொறுப்போடும் இலக்கு போன்ற ஊடகங்களின் தேவை அவசியமாகிறது.

எனவே இலக்கு மின்னிதழ் உலகமெங்கும் தொடர்ந்து தனது மின்னிதழ் பயணத்தைப் பரப்ப வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

## தமிழர்களின் கனவை அடைய இலக்கு வழிகாட்டுகிறது

**மு.களஞ்சியம் தலைவர், தமிழர் நலப் பேரியக்கம்.**



இலங்கை இனவெறி அரசு, பல இலட்சம் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்த பிறகு, ஈழத்தில், தமிழகத்தில், புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கிற தமிழர்களை ஒன்றிணைத்து, பற்றி எரிந்த விடுதலை நெருப்பை அணைந்து விடாமல் காக்க, குரல் இழந்து ஊமைகளாய் தமிழீழத்தில் வாடுகிற மக்களின் உரிமைககளுக்காக குரல் கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

இலக்கு இல்லாத செயல் வீண் என்பார்கள். ஆகவே சரியான இலக்கோடும், நீண்ட நெடிய கனவோடும் கடந்த ஓராண்டு காலமாக இயங்கி வருகிற ‘இலக்கு’ இணைய வழி இதழ் மேலும் வளர்ந்து தமிழர்களின் கனவை அடைய வழி காட்ட வேண்டும் என நான் சார்ந்துள்ள தமிழர் நலப் பேரியக்கத்தின் சார்பில் மனதார வாழ்த்துகிறேன்.

# இலக்கு மின்னிதழை ஆர்வத்தோடு வாசிக்கும்
# தமிழகத்தின் மாணவர்கள், பேராசிரியர்கள், பொதுமக்கள்

